# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௮ | மலர் |
| --- | --- | --- |
| | ஏவிளம்பி, தை | |
| ௩௩ | 1958 சனவரி, பிப்ரவரி. | ௬ |


கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்

## முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்.

(முற்றொடர்ச்சி துணர் ௩௩. மலர் ௫ பக். 135)

ஏடு ௪. பக்கம்—க. ★

ஸ்வஸ்திஸ்ரீ *||வ கோனேரின்மை கொண்டான் நித்த
விநோதவளநாட்டு வீரசோழ வள|நாட்டு வெண்ணிக்கூற்றத்து
நாட்டார்க்கும் பிரமதேயக்கிழவர்க்கும் தேவதானப் பள்ளிச்|
சந்தக் கணி முற்றூட்டு வெட்டிப்பேற்றுப் பழவறச் சாலாபோகம்
உள்ளிட்ட ஊர்களிலார்க்கும்| நகரங்களிலார்க்கும் நமக்குயாண்டு
எட்டாவது நாள் நூற்றேழினல் நாம் பெரும்பற்றப்புலியூர்
விட்ட வீட்டின்[1] உள்ளால் மாளிகையின் கீழை மண்டபம்
இராஜேந்திரசோழப் பிரமாதிரா|ஜனில்[2] நாமுண்ணுவிருந்து நித்த
விநோதவளநாட்டு வீரசோழவளநாட்டு நாட்டுப்பொது[3]| திரிபு
வன மகாதேவிப்பேரேரியும் இவ்வேரி அரயர்கள் கமுகுகொள்ளி
வெட்டிப் பேறும் நாட்டுப் பொ|து ஊர் நத்தமும் நாட்டுப்
பொது சிறு பற்றைக்காடும் என்றளந்துவந்த நிலமும் இந்நாட்டு
நெற்கு|ப்பைத் திருமால் காடனும் தஞ்சை நாட்டுக்கோனும்,
வேளான் அரங்கனும் உள்ளிட்டார் பற்றும் இந்நாட்டுச்|செம்பங்
குடியும் இந்நாட்டுக் குளப்பாடும் இந்நாட்டுத் துளாரும் இந்
நாட்டு நல்லம்பரும்| இந்நாட்டுத் திரிபுவன மாகாதேவிநல்லூரும்
இந்நாட்டு விச்சூரான சிக்கரும் இந்நா|ட்டு முஞ்ஞாவலும்
இந்நாட்டுக் கூத்தனூரும் இந்நாட்டு கமுகஞ்சேந்தன்குடியும்
இந்நா|ட்டு வைகுந்தநல்லூரும் இந்நாட்டு மயிமாலய
நல்லூரும் இந்நாட்டுக் கீழ் மாத்தூரும் இந்நாட்|டுப் பர
கேசரி நல்லூரும் இந்நாட்டுப் பெண்ணுகடமும் இந்நாட்டு
உறத்தூரும் இந்நாட்டுச் சிறை|யூரும் இந்நாட்டுக் கீழ்

---

★ இது முதல் செப்பேடுகளின் தமிழ்ப் பகுதி தொடங்குகிறது,

* கோடு செப்பேட்டில் ஒரு வரி அளவைக் குறிக்கும்,

1. விட்டவீடு—தங்கியிருந்த மாளிகை. விடுதல்—தங்குதல்.
2. இராஜேந்திரசோழப் பிரமாதிராஜன் என்ற பெயருடைய இம்மண்டபம் தில்லையில் அரசன் தங்கியிருந்த மாளிகையின் கிழக்குப் பகுதியாகும்.
3. நாட்டுப்பொது—நாட்டு மக்கள் எல்லோர்க்கும் பொதுவுரிமையுடையது.

சோற்றுத்துறையும் இந்நாட்டு நெடுவாயிலும் இந்நாட்டேறு பாடியும் இந்நாட்டுப் புளிகைக்குடியும் இந்நாட்டுப் பெருங்குடியும் இந்நாட்டு முண்டனூரும் இந்நாட்டுத் தாமோதரந | ல்லூரும் இந் நாட்டு அரசூரும் இந்நாட்டு வாளுவநல்லூரும் இந்நாட்டுக் குணசீலநல்லூரும் இந்நாட்டுச் செய் | யாநல்லூரும் இந்நாட்டுச் சிற்ருலிநல்லூரும் இந்நாட்டு நித்தவிநோத நல்லூரும் இந்நாட்டு வேங்கூரும் இந்நா | ட்டு நியாயநடை நல்லூரும் இந்நாட்டுச் சேந்தமங்கலமும் இந்நாட்டு இகழாநிலை நல்லூரும் இந்நாட்டு வீர | நாராயண மங்கலமும் இந்நாட்டுக் கருவூரும் இந்நாட்டுக் கோவிந்தநல்லூரும் இந்நாட்டு வீரசோழநல்லூரு | ம் இந்நாட்டு கொஞ்ஞாப்பூரும் இந்நாட்டு மணிமங்கலமும் இந்நாட்டுத் துறையா நல்லூரும் இந்நாட்டு வா | மன நல்லூரும் ஆக இவ்வூர் களும் இந்நாட்டு வெண்ணிக் கூற்றத்து ஆதநல்லூரும் இந் நாட்டுச் சிறுமுன்னியூரும் | இந்நாட்டு மேட்டு மேற்குடியும் இந் நாட்டுப் பூதமங்கலத்துப்பால் காடன்காரிகுறிச்சியும் இந்நாட்டுப் பருத்தி | நியமத்து[1] திறப்பான தேவதானம்[2] தேவதானக்குடியும் இந்நாட்டு விளங்குடியும் இந்நாட்டு வெண் |

பக்கம் உ

ணிக்கணி முற்றூட்டிறங்கலும்[3] இந்நாட்டு நெடுங்கணக் குடியும் இந்நாட்டுப் பூதமங்கலத்துப்பால் அயலூ | ட்டிகாணி யும் இந்நாட்டுப் பள்ளிச்சந்தம்[3] இறங்கின ஸ்ரீகரண மங்கலமான கொட்டாரக்குடிப் பள்ளியும் இந்நாட் | டுப்புறகுடியும் ஆக இவ் வூர்கள் வெண்ணிக் கூற்றத்து முதல் தவிர்த்து இவ்வூர்களும் முன் காணியுடையா | ரை மாற்றிக் குடிநீக்கிக் காராண்மை[4] மீயாட்சியும்[5] மிகுதிக் குறைமையும் முள்ளடங்க வெள்ளான் வ| கையில்[6] முதல்யாண்டு எட்டாவது முதல் தவிர்ந்து வெள்ளா னூர்களைப் பிரமதேயமாகச்[7] செய்வன பிரமதே | யமற்ருதி[8] இறைகட்டும்படி[9] இவ்வூர்களுக்குத் தவிர்த்து இவ்வூர்களில்

1. பருத்திநியமம்—தேவாரப் பாடல்பெற்ற திருப்பருதிநியமம் என்னும்திருத்தலம்.
2. திறப்பான தேவதானம்—கோயிலுக்குரியதாய் அரசாங்கத்துக்கு வரி செலுத்தும் நிலையில் அமைந்த நிலம். இவ்வகை நிலங்களைத் திருநாமத்துக்காணியெனவும் வழங்குப. அரசாங்க வரியின்றிக் கோயிலுக்கு விட்ட நிலங்கள் தேவதான இறையிலி எனப்படும்.
3. கணிமுற்றூட்டு இறங்கல் — சோதிடர்களுக்கு அரசாங்க நிலவரிமுதல் எல்லா வரிகளையும் பெற்றுக்கொள்ளும்படி விட்ட இறையிலி நிலம். இவ்வாறு புலவர் களுக்கு விடப்பட்ட நிலம் புலவர் முற்றூட்டு என வழங்கும்.
4. காராண்மை— குடிவாரம் (உழவர்களுக்கு உரியது).
5. மீயாட்சி—மேல்வாரம் (நிலவுரிமையாளர்க்கு உரியது)
6. வெள்ளான்வகை—குடிகளுக்கு உரிய நிலம்.
7. பிரமதேயம்—பிராமணர்களுக்கு அளிக்கப்பெற்ற இறையிலி நிலம்.
8. பிரமதேயமற்ருதி—பிரமதேய வகையில்.
9. இறைகட்டுதல்—வரி செலுத்துதல்.

நாட்டுப் பொதுத் திரிபுவன மஹா | தேவிப் பேரேரியும் இவ் வேரியரயர்கள் கமுகுகொள்ளி வெட்டிப்பேறும் நாட்டுப் பொது வூர் நத்தமும் நாட்டு | ப் பொதுச் சிறுபற்றைக் காடு மென்றளந் துவந்தபடி நிலத்தில் இந்நாட்டு நித்தவிநோத நல்லூரொடும் | கூட வரியிலிட்ட ஊர் நத்தம் நிலம் நீக்கிநின்ற நிலன் பத்தொன் பதேய் நாலுமாவரை முந்திரிகை | க்கீழ் முக்காலே ஒருமா முக் காணிக்கீழ் முக்காலே ஒருமாவிலும் திரிபுவன மாதேவிப் பே | ரேரியுங் கரையும் நிலன் ஐஞ்ஞூற்றெழுபத்தெட்டே மும்மா வரை யரைக்காணிக்கீழ் நா | ன்குமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவும் இவ்வேரியினுள்ளால் திருவிறையான்குடி[1] மா| தேவர் ஸ்ரீ கொயிலும்[2] திருமுற்றமும்[3] நிலன் முக்காணி முந்திரிகைக் கீழ் எட்டுமா முக்காணி | க்கீழ் முக்காலே ஒருமாவும் பிரமதேய இறை யிலி தெங்குமாவும் உள்ள நந்தவானம் நிலன் | ஒருமாவரை முந்திரிகைக்கீழ் இரண்டு மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவும் இவ்வூரரைய | ர்கள்[4] வெட்டிப்பேறு[5] கமுகுகொள்ளி நிலத்தில் நீர்நிலை ஓடை நிலன் அறுமாவரையும் நாட்டார்குடி யி | ருக்கை நத்தம் நிலன் பதினென்றே முக்காலே மும்மாவரைக் கீழ் ஒருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே | இரண்டு மாவும் நாட்டுப் பொதுக் குளமும் கரையும் நிலன் காலே அரைமாவு மாக நீங்கு நிலன் ஐஞ்ஞூ|ற்றுத் தொண்ணூற்றைஞ்சே முக்காலே ஒருமாவரைக்கீழ் முக்காலே ஒரு மாவரை முந்திரிகைக்கீழ் அரை | யே இரண்டுமா நீக்கி நிலன் நூற்றறுபத்து மூன்றே எழு மாவின் கீழ் முக்காலே நான்குமாவரை | க்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினுல் நெல்லு இருநூற்றுக் கலமும் நெற்குப்பை திரு | மால் காடனும் தஞ்சைநாட்டுக் கோனும் வேளான் அரங் கனும் உள்ளிட்டார் பற்று அளந்தபடி நி | லன் நூற்றறுபதரையே இருமாவரைக்கீழ் எழுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் | ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் மாதேவர் குள மும் கரையும் நிலன் அறுமாவரை முந்திரிகைக்கீழ் |

ஏடு ரு. பக்கம் க.

அரையே ஆறுமாவும் நீக்கி நிலன் நூற்று......யெழுபதரை அரைக்காணிக்கீழ் முக்கா | லே அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவினுல் நெல்லு ஆயிரத்தைஞ்ஞூற்றுக் கலமும் இனப்

1. திருவிறையான்குடி—தேவார வைப்புத்தலங்களுள் ஒன்று.
2. மாதேவர் ஸ்ரீகோயில்—சிவபெருமான் திருக்கோயில்.
3. திருமுற்றம்—திருக்கோயிலின் முகப்பு.
4. அரையர்கள்—ஊர்த்தலைவர்கள்.
5. வெட்டிப்பேறு—ஊர்ப் பொதுஊழியர்களுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்.

பா | ட்டம்[1] காசு ஒன்றும் செம்பங்குடியளந்தபடி நிலன் நூற்று முப்பத்தேழே யாறுமாக்காணி யரைக்காணி | முந்திரிகைக்கீழ் நான்மா வரையிலும் இவ்வூர்ப் பிடாரிகோயிலும் திருமுற்றமும் ஐயன் கோயிலும் | திருமுற்றமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போன[2] சிங்களாந்தகன் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊ | டறுத்துப்போய் மயிமாலய நல்லூருக்குப்பாயும் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போ | ம் கருணைக்காலான ·மும்முடிச் சோழப்பேராற்றுலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போன சுந்தரசோழ | வாய்க்காலும் இவ்வூர்ச் சுடுகாடுமாக நிலன் அரையே மும்மாவரை முந்திரிகைக்கீழ் எட்டுமா முக்கா | ணிக்கீழ் முக்காலே ஒருமா நீக்கி நிலன் நூற்று முப்பத்தாறரையே இரண்டுமா முக்காணி முந்திரிகைக் | கீழ் அரைமா வரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவினுல் நெல்லு நாலாயிரக்கல | மும் மீன் பாட்டங்காசு மூன்றும் குளப்பாடு அளந்தபடி நிலன் நூற்றிருபத்தொன்பதே மாகா | ணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் கீழரையேய் மூன்றுமா முக்காணியிலும் இவ்வூர் குளமும் க | ரையும் இவ்வூர் நிலத்தை யூட(று) த்துப்போன சிங்களாந்தகன்[1] வாய்க்காலும் இவ்வூர் நி | லத்தை ஊடறுத்துப் போன செய்யா நல்லூர் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊ | டறுத்துப்போய் வாளுவ நல்லூருக்குப் பாயும் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத் | துப்போய் பெருங்குடிக்குப் பாயும் வாய்க்காலும் இவ்வூர்மாதேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இவ் | வூரிதே இறையிலி குளமும் கரையும் இவ்வூர் ஐயன் கோயிலும் திருமுற்றமும் இவ்வய்யனுர் இறையிலி | குளமும் கரையும் இவ்வூர் பிடாரி கோயிலிரண்டினுலும் இவ்வூர் சுடுகாடுமாக நீங்கும் நிலனெ ன்றே முக்காலே இரண்டு மாக்காணி முந்திரிகைக் கீழரையேய் மூன்றுமா முக்காணி அரைக்காணி முந்திரி | கைக்கீழ் நாலுமா நீக்கி நிலன் நூற்றி ருபத்தேழே | மும்மாவரை முந்திரிகைக்கீழ் முக்காலே நான் | குமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவினுல் நெல்லு மூவாயிரத்தொரு நூற்றுக் கலமும் துளாரள | ந்தபடி நிலன் நூற்றிருபத்து நாலே முக்காலே காணி முந்திரிகைக்கீழ் முக்காலே ஒருமா வ | ரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் குளமும் கரையும் பிடாரிகோயிலும் திருமுற்றமும ஐய | ன்கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன புள்வேளூர் வாய்க்காலும் |

---

1. பாட்டம்—வரி.
2. ஊடறுத்துப் போதல்—நடுவே செல்லுதல்.

(தொடரும்)

# வேந்தர் வாழ்வு.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனார்.

பண்டைத் தமிழ் மன்னர்கள் எப்படி வாழ்ந்து வந்தனர்? ஒவ்வொரு நாளும் அவர்கள் செய்துவந்த செயல்கள் யாவை? நாட்டுக்கும், மக்களுக்கும் அவர்கள் செய்துவந்த பணிகள் எவை? இக்கேள்விகளுக்குப் பழந் தமிழ் இலக்கியங்கள் நமக்கு விடையளிக்கின்றன.

## அரசர்களின் அன்றாட வேலைகள்.

தமிழரசர்கள் அன்றாடம் செய்துவந்த வேலைகளைப்பற்றிப் புறநானூற்றுப் பாட்டு ஒன்று புகல்கின்றது. **உறையூர் முதுகண்ணன் சாத்தனார்** என்ற புலவர் பாட்டு அது. சோழன் நலங்கிள்ளி ஒவ்வொரு நாளும் செய்யும் வினைகளை அச்செய்யுளிலே கூறுகிறார் புலவர். பொதுவாக அரசர்களின் அன்றாட நடவடிக்கைகளை அறிந்துகொள்ள அச்செய்யுள் நமக்குத் துணை செய்கின்றது. இது புறநானூற்றின் 29-வது பாட்டு.

"காலையிலே யாவரும் காணும்படி காட்சிக்கு எளியனாய் வீற்றிருப்பாய், தலைமயிரிலே, பொன்னாலாகிய தாமரையையும், பொன் மாலையையும் அணிந்திருக்கும் பாணர்கள் கூட்டம் உன்னை முற்றுகையிடும். அவர்களுக்கு வேண்டுவன அளித்தபின்னர் அக்கூட்டம் நீங்குவதாக!

பின்னர், உனது மார்பால், உனது உரிமை மகளிரின் தோள்களைத் தழுவிக்கொண்டு சிறிதுபொழுது ஓய்வு எடுத்துக் கொள்ளுவாயாக!

அதன்பின் சிறிதும் வெறுப்பதற்கு இடமில்லாத உனது கோயில் வாயிலிலே இனிதாக முரசொலிப்பதாக!

தீயோரைத் தண்டிப்பாய்; நடுநிலையோர்க்கு இரங்கி உதவுவாய். இவ்வாறு இடையறாமல் முறை செய்வதிலே சுறுசுறுப்புடன் இருப்பாய். நல்வினையால் நன்மையில்லை; தீவினையால் தீமையும் இல்லை: என்று வீண் வாதம் பேசுவோருடன் தொடர்பு கொள்ளாது ஒழிக!

உன்னுடைய படை வீரர்கள் இன்புற்று வாழும்படி அவர்களுக்கு நல்ல இருக்கையும், வேண்டும் பொருள்களும் அளிப்பாயாக!

உனது சுற்றத்தார் அனைவரும் வறுமையின்றி இன்பத்திலே திளைத்து வாழ்வார்களாக!

நீ தேடிப் பாதுகாத்த செல்வம், உனக்கு இவ்வுலகிலே அழியாத புகழை நிலைநிறுத்தும் வழியிலே செலவழிக!"

இக்கருத்துக்கள் முதுகண்ணன் சாத்தனார் பாடலில் காணப்படுவன.

புறநானூற்றில் உள்ள 239 வது செய்யுளும், அரசர்களின் நடத்தையை அறியத் துணைசெய்கின்றது. இச்செய்யுள் பேர் எயில் முறுவலார் என்னும் புலவர் நம்பி நெடுஞ்செழியன் என்னும் பாண்டியனைக் குறித்துப் பாடிய பாடலாகும். இப்பாண் டியன் குறுநில மன்னனாகக் காணப்படுகின்றான். இவனது வாழ்க்கையைப்பற்றிக் கூறியிருப்பதும், பொதுவாக மன்னர் களின் வாழ்க்கையை அறிவதற்கு உறுதுணையாகும்.

"வளையல்களை அணிந்த மகளிரின் தோள்களைத் தழுவிக் கொண்டபின், மலர்ச் சோலைகளின் மலர்களைச் சூடி மகிழ்ந்தான்; குளிர்ந்த நறுமணச் சாந்தைப் பூசிக்கொண்டான்; பகைத்தவர்களை அடியோடு அழித்தான்; நண்பர்களைப் புகழ்ந்து பாராட்டினான்; இவர் நம்மினும் வலியவர் என்று எண்ணி யாருக்கும் வணக்கங் கூறமாட்டான்; இவர் நம்மினும் எளியவர் என்று கருதி யாரை யும் பழிக்கமாட்டான்; பிறரிடம் சென்று தனக்கு உதவவேண்டு மென்று இரந்தறியான்; தன்னிடம் வந்து உதவி கேட்டு இரந்த வர்க்கு இல்லையென்று சொல்லி அறியான்; அரசர்களின் சபை களில் எல்லாம் தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசும்படி வாழ்ந்தான்; எத்தகைய பெரும் படை எதிர்த்து வந்தாலும் புறங்கொடாமல் போர் செய்தான். போரிட்டுப் புறமிட்டோடும் படைகளைப் பின்சென்று தாக்காமல் அவைகள் ஓடுவதைப் பார்த்து நின்றான்; விரைந்து செல்லும் குதிரையில் ஏறியூர்ந்தான்; நீண்ட தெருவிலே தேரேறிச் சென்றான்; உயரமான யானையிலே ஏறிச்சென்றான். இனிய மது நிறைந்த குடங்களை அனைவர்க்கும் வழங்கினான்; பாணர்கள் மகிழும்படி அவர்கள் பசி நீங்க விருந்திட்டான்; தெளி வான அறமொழிகளையே கூறினான்; இவ்வாறு, உயர்ந்த பண் புள்ளவன் செய்யக்கூடியன எவையோ அவைகளை யெல்லாம் செய்தான்". இதுதான் அச்செய்யுளிலே அமைந்துள்ள பொருள்.

தொடியுடைய தோள் மணந்தனன்;
கடிகாவின் பூச்சூடினன்;
தண்கமழும் சாந்து நீவினன்;

செற்றோரை வழிதபுத்தனன்;
நட்டோரை உயர்வு கூறினன்;
வலியர்என வழி மொழியலன்;
மெலியர் என மீக்கூறலன்;
பிறரைத் தான் இரப்பு அறியலன்;
இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்;
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்;
வருபடை எதிர் தாங்கினன்;
பெயர்படை புறம் கண்டனன்;
கடும்பரிய மாக் கடவினன்;
நெடும் தெருவில் தேர் வழங்கினன்;
ஓங்குஇயல் களிறு ஊர்ந்தனன்;
தீம்செறி தசும்பு தொலைச்சினன்;
பாண் உவப்பப் பசிதீர்த்தனன்;
மயக்குஉடைய மொழி விடுத்தனன்;
ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன்.

இதுவே அப்பாடல்.

பண்டைத் தமிழ் மன்னர்களின் வாழ்வு பெரும்பாலும் உலகின்பத்தையே குறிக்கோளாகக்கொண்டிருந்தது; தாம் இன்புற்று வாழ்வதையும், தம்மைப்போல் மற்றவர்களையும் இன்புற்று வாழச் செய்வதையுமே அவர்கள் வாழ்வின் பயன் என்று கருதினர். மதத்தைப்பற்றியோ, வேறு ஆன்மீகத்துறை பற்றியோ அவர்கள் அவ்வளவாகக் கவலைகொண்டிருக்கவில்லை. இவ்வுண்மையை மேலே காட்டிய புறநானூற்றுச் செய்யுட்களால் காண்கின்றோம்.

ஆயினும், பண்டைத் தமிழ் வேந்தர்கள் 'கடவுளைப்பற்றிக் கவலையற்றிருந்தார்கள்; அவர்கள் நாத்திகர்களாக இருந்தனர்' என்று கூறிவிட முடியாது. அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையிருந்தது; இறை வழிபாடு செய்து வந்தனர். ஆனால், இறை வணக்கமும் நம்பிக்கையும் தனிப்பட்டவர்களின் உரிமை என்று கருதப்பட்ட காரணத்தால், மன்னர்களைப்பற்றிப் பாடிய புலவர்கள், அவர்களுடைய ஆன்மீக ஒழுக்கத்தைப்பற்றி—கடவுள் கொள்கைபற்றி—அவ்வளவாகப் பாடவில்லை என்றுதான் எண்ண வேண்டும்.

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி யைப்பற்றிக் காரி கிழார் பாடிய பாடல் புறநானூற்றின் ஆறுவது பாட்டு. இதிலே, அம்மன்னனுடைய இறையன்பைப்பற்றியும் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

"பணியியர் அத்தைநின் குடையே
முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே"

என்பது அப்பாடலின் பகுதி. "உனது பூச்சக்கரக்குடை, சிவ பெருமானது கோயிலை வலம் வரும்பொழுது மட்டும் தாழ்க" என்பதே இதன் பொருள். இதனால் இப்பாண்டியன் சிவனடியான் என்பதை அறியலாம். பண்டை மன்னர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களாகத்தான் இருந்தனர் என்பதற்கு இப் பாடல் ஒன்றே போதும்.

## கலை வளர்த்தனர்.

பண்டைத் தமிழ் வேந்தர்கள் கலைகளைச் சுவைப்பவர்களாக இருந்தனர்; கலைகளிலே அவர்களுக்கு அளவுகடந்த ஆர்வம். கலைகளைச் சிறந்த பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். கலைஞர்களைப் போற்றினர்; அவர்கள் வறுமையால் வாடாமல் காப்பாற்றினர்; கலைஞர்களைப் போற்றுவதால்தான் கலைகள் வளர்ந்தோங்கும் என்ற உண்மையை உணர்ந்திருந்தனர்.

உழைக்கும் பொதுமக்களை ஊக்கப்படுத்துவது கலைகள்; அவர்கள் ஓய்வு நேரத்தை இன்பமாகக் கழிக்க உதவுவது கலைகள்; அவர்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்குவது கலைகள். இந்த உண்மையை உணர்ந்தே மன்னர்கள் கலைகளை வளர்த்தனர்; கலைஞர்களைப் பாதுகாப்பதை முதற் கடமையாகக் கொண்டிருந் தனர்.

நரம்பின் முரலும் நயம்வரும் முரற்சி
விறலியர், வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாணர் உவப்பக் களிறுபல தரீஇ

என்பது மதுரைக்காஞ்சி. (17–19 மதுரைக்காஞ்சி)

"யாழைப்போன்ற இனிய குரலையுடைய விறலியர்கள் வெறுங்கையிலே பொன் வளையல்களை அணியும்படி செய்வான்; பாணர்கள் மகிழும்படி, யானைகள் பலவற்றைப் பரிசாகக் கொடுப்பான்." இதுவே மேலே காட்டிய அடிகளின் கருத்து.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் கலைஞர்களைப் போற்றிய திறத்தை இவ்வாறு குறித்தார் மாங்குடி மருதனார் என்னும் புலவர்,

கரிகாற்சோழன் கலைஞர்களை எவ்வளவு அன்புடன் போற்றிப் பாதுகாத்தான் என்பதைப் பொருநர்ஆற்றுப்படையிலே தெளிவாகக் காணலாம். ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் என்னும் புலவர் கரிகாற் பெருவளத்தானுடைய கலையுணர்ச்சியைப் பாராட்டிப் பாடியிருக்கின்றார்.

கரிகாலனிடம் பரிசுபெற்றுவந்தான் ஒரு பொருநன். அவன் மற்றொரு பொருநனிடம் கரிகாலன் கொடைச் சிறப்பை எடுத்துரைக்கின்றான்; இவ்வாறு அமைந்த பகுதியிலே கரிகாலனின் கலைக் காதலை உணர்த்துகின்றார் முடத்தாமக் கண்ணியார்.

"பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைபோல நான் அவனை நாடிச் சென்றேன். அவனுடைய கோட்டை வாயிற் கதவு இரவலர்க்காக எப்பொழுதும் திறந்தே வைத்திருக்கும். கலைஞர்களாகிய இரவலர்களைக் காவலர்கள் தடுக்கமாட்டார்கள். நான் அவனுடைய வாயிலைக் கடந்து உள்ளேசென்ற மகிழ்ச்சியால் இளைத்த என் உடம்பு பருத்தது. விடியற்காலத்திலே என் உடுக்கையை அடித்துத் தாளத்துடன் யான் பாடினேன். உடனே அவன் என்னை இதற்குமுன் பழகிய உறவினன்போல் அன்புடன் அழைத்தான். இனிய சொற்களைக் கூறி வரவேற்றான். தன் கண்ணால் காணும்படி அண்மையிலேயே இருக்கச்செய்தான். அன்புடன் பார்த்தான். ஈரும்பேனும் குடியிருந்த எனது கந்தையுடையைக் களையச் செய்தான். நுண்ணிய மெல்லிய பாம்புச் சட்டை போன்ற வழவழப்பான ஆடையை அளித்தான். நல்ல மாளிகையிலே வைத்து ஏவல்செய்ய மகளிரையும் அமர்த்தினான். அவர்கள் பொற்கலத்திலே இனிய மதுவை நிரப்பித் தந்தனர். வேண்டுமளவு கொடுத்தனர். அதனை உண்டு யானும் சுற்றமும் களைப்பு நீங்கினோம்.

"பிறகு மன்னன் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் அழைத்தான். அருகு சென்றோம். எங்களைப்பற்றி இன்னார் என்று அரசனுக்கு அறிமுகம் செய்தனர். நாங்களும் அரசனிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொண்டோம். பின்னர் எங்களுக்கு வேவிறைச்சி, சூட்டிறைச்சி, வெவ்வேறு சுவைபொருந்திய பலகாரங்கள் முதலியவற்றை அளித்து உண்ணச்செய்தான். நாங்களும் உண்டு மகிழ்ந்தோம்.

"ஒவ்வொருநாளும், நாங்கள் எங்கள் கலைத் திறமையைக் காட்டினோம்; எங்கள் பாடல் ஆடல்களை யெல்லாம் நடத்திக் காட்டினோம். இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. ஒவ்வொரு

நாளும் அவன் அளித்த நல்ல விருந்தை உண்டு மகிழ்ந்து பொழுது போக்கினேம்.

இவ்வாறு விருந்திலே திளைத்து வெறுப்படைந்த நானும், என் சுற்றமும், எங்கள் ஊருக்குச் செல்ல விரும்பினேம். இதை அரசனிடம் அறிவித்தோம். அவன் எங்களை விட்டுப் பிரிய மனமற்றவன் ஆனான். 'எங்களை விட்டுப் பிரிகின்றீரோ' வென்று சினந்தவனைப்போல் கேட்டான். பின்னர் யானைகளையும், ஆடை அணிகளையும், ஏராளமாக அளித்தான்; நாங்களும் எங்கள் ஆசை தீர நிரம்பப் பெற்றேம். இனி வறுமை எங்களை அணுகாத அளவுக்குப் பரிசுபெற்றேம்".

"இவ்வாறு கரிகால் பெருவளத்தான் கலைஞர்களைப் புரந்த செயலைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. பொருநர் ஆற்றுப்படையின் 64-வது அடிமுதல் 129-வது அடிகள் வரையில் உள்ள பகுதியிலே இதனைக் காணலாம்.

பதிற்றுப்பத்தின் மூன்றுவது பத்து **பல் யானைச் செல்கெழு குட்டுவனைப்பற்றிப்** பாடப்பட்டது. பாடியவர் **பாலைக் கௌதமனார்** என்னும் புலவர். அவர், குட்டுவனுடைய கலை ஆர்வத்தையும், கலைஞர்களைக் கைவிடாமல் காப்பாற்றும் சிறப்பையும் பற்றியே பாராட்டிப் பாடுகின்றார்.

"நாட்டிலே மழைவளங் குறைந்து வறட்சியும், பஞ்சமும் தோன்றிய காலத்திலும் நீ வாத்தியங்களை வாசித்துப் பாடும் பாடகர்களைக் கைவிடமாட்டாய்; அவர்களுடைய பசி நீங்க உணவளித்துப் பாதுகாப்பாய்; அவர்கள் மகிழும்படி பெரும் ஆடை அணிகளையெல்லாம் அளிப்பாய். உன்னுடைய கொடையினல் அக்கலைஞர்கள் பஞ்சம் பசி அறியாமல் உண்டு மகிழ்ந்து கலைவளர்ப்பார்கள்" என்ற கருத்தைப் பாலைக் கௌதமனார் வெளியிடுகின்றார்.

அலம்தலை உன்னத்து அம்கவடு பொருந்தி
சிதடி கரையப், பெருவறம் கூர்ந்து,
நிலம் பைது அற்ற புலம்கெடு காலையும்,
வாங்குபு தகைத்த கலப்பையர் ஆங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்
பொன்செய் புனைஇழை ஒலிப்பப் பெரிது உவந்து
நெஞ்சுமலி உவகையர் உண்டு மலிந்துஆடச்
சிறுமகிழானும் பெரும்கலம் வீசும்
போர்அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ,

(பதிற்றுப்பத்து பா. 23)

இவ்வடிகள் சேரனுடைய கலைப்பற்றைக் காட்டுகின்றன. மேலே காட்டியவைகளால் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் கலை வளர்ச்சியிலே கருத்துள்ளவர்களாயிருந்தனர்; கலைஞர்களுக்கு உதவுவதையே தங்கள் சிறந்த முதன்மையான பணியாகக்கொண்டிருந்தனர்; என்ற உண்மையை உணரலாம்.

## வீர வாழ்வு.

பண்டைக்கால மன்னர்கள், நோயினால் வருந்தி இறப்பதை விரும்பவில்லை. அவ்வாறு இறப்பதை இழிவாக எண்ணினர். இப்படி இறப்போர்க்கு மறுவுலகச் செல்வம் கிடைப்பதும் இல்லையென்று நம்பினர். போரிலே இறப்பவர்களுக்குத்தான் வீர சுவர்க்கம் உண்டென்று கருதினர். போரிலே மாண்டு போகாமல் நோயுற்று மாளும் மன்னர்களின் உடலை அப்படியே அடக்கம்பண்ணமாட்டார்கள். அந்தணர்களால் குறிப்பிடப் பட்ட நல்ல நேரத்திலே தருப்பைப் புல்லிலே அவ்வுடம்பைக் கிடத்துவார்கள்; வாளால் துண்டாக்குவார்கள். அதன் பின்பே அவ்வுடம்பை அடக்கம் செய்வார்கள். இவ்வழக்கம் தமிழகத்து மன்னர் மரபில் இருந்தது என்பதைப் புறநானூற்றில் 63-வது பாடலால் காணலாம். இப்பாடல் அதியமான் நெடுமான் அஞ்சியைப்பற்றி ஔவையார் பாடியது.

"உன்னுடன் போரில் எதிர்த்தோர் உன்னை வெல்ல முடியாது. அவர்கள் வீர சுவர்க்கம் செல்வது உறுதி. போரிலே புறமிட்டு ஓடித் தமது வீட்டிலேயே நோயால் இறந்தோர்க்கு மறுமையில் நன்மையில்லை. ஆதலால் நோயால் இறந்த மன்னர்களை அந்தணர்கள் குறித்த நேரத்திலே தர்ப்பைப் புல்லிலே கிடத்துவார்கள். 'போரிலே மாண்ட மன்னர்கள் அடையும் நல்லுலகம் செல்க' என்று கூறி அவர்கள் உடம்பை வாளால் துண்டுபோடுவார்கள்; அதன்பின் அடக்கம் செய்வார்கள். உன்னை எதிர்த்த வேந்தர்கள் இத்தகைய இழிவுக்கு ஆளாக மாட்டார்கள். உன்னால் போரிலே மடிந்து நல்லுலகைப் பெறுவார்கள்" என்ற கருத்தை அப்புறநானூற்றுச் செய்யுள் வெளியிடுகின்றது.

திண்பிணி முரசம் இழும்என முழங்கச்
சென்று அமர்கடத்தல் யாவது? வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றூர், வெடிபட்டு
ஓடல் மரீஇய பீடுசில் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங்கு அறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்

திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி,
'மறம் கந்தாக நல்அமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்க'என
வாள்போழ்ந்து அடக்கலும் உயர்ந்தனர் மாதோ.

இதுவே அந்தப் புறநானூற்றுப் பாடல். (புறநா. 93)

வீரப்போரில்தான் மன்னர்கள் மாளவேண்டும் என்று நம்பியதற்குக் காரணம் இருக்கவேண்டும். எல்லா மன்னர்களும் சண்டையில்தான் சாகவேண்டும் என்ற கட்டாயமிருந்தால் நாட்டிலே ஒருநாளும் சமாதானம்—அமைதி—நிலைக்க முடியாது. நாட்டிலே செல்வமோ—கலைகளோ வளர முடியாது. நாட்டு மக்களும் அமைதியுடன் வாழ முடியாது. தாம் காக்கும் நாட்டைப் பகைவர்களின் கொள்ளைக்கு இடமாகாதபடி பாதுகாக்க வேண்டும்; தமது நாட்டுக் குடிமக்களுக்கு எவராலும் இன்னல் விளைக்க முடியாமல் காப்பாற்றவேண்டும்; அரசர்கள் தங்கள் உயிரைப் பெரிதாக எண்ணாமல் நாட்டின் நன்மையையே பெரிதாக மதிக்கவேண்டும்; என்பதற்காகவே இத்தகைய கொடிய சபதத்தை மன்னர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதே உண்மை.

வேந்தர்கள் நாட்டிற்கு நன்மையான செயல்களைச் செய்வதிலே எப்பொழுதும் ஈடுபட்டிருக்கவேண்டும்; உயிர் போவதாயினும் நற்செயல்களை நிறைவேற்றப் பின்வாங்கக்கூடாது; தம் உடலின்பம் ஒன்றுக்காகவே உயிர் வாழ்ந்து, இறுதியில் நோய் வாய்ப்பட்டு உயிரிழப்போர்க்கு இவ்வுலகிலே புகழ் இல்லை; அவர் பிறந்ததனால் யாருக்கும் எப்பயனும் இல்லை; என்ற கருத்தையும் மேலே காட்டிய நம்பிக்கை வலியுறுத்துவதாகும்.

பண்டைத் தமிழ் வேந்தர்கள் தங்கள் வாழ்நாளைப் பயன் உள்ள வழியிலே கழித்தனர். வறியோர்க்கு வழங்குவது; கலைஞர்களைக் காப்பது; அறத்தைப் பாதுகாப்பது; தாமும் இன்பம் அனுபவிப்பது; "தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்று வள்ளுவர் கூறியதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்வது; இவைகளைப் பழந்தமிழ் மன்னர்கள் பின்பற்றி வாழ்ந்தனர். ஆதலால் அவர்கள் மக்களிடம் மதிப்புப் பெற்று வாழ்ந்தனர்.

# பாணர்கள் பயிற்றுவித்த இசைமுறை.

[குடந்தை, சங்கீதம், ப. சுந்தரேசன்.]

இளி என்ற இசை இக்காலத்தில் ஷட்ஜம் என்ற இசையாகும். எவ்வாறெனில், ஷட்ஜம் எனும் சொல், ஆறு பிறக்குமிடம் எனப் பொருள்கொண்டு, அதாவது, ஏனைய ருஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், என்ற ஆறிசைகளும் தோன்றத்தக்க தொரு அடிமனையிசை எனப் பொருள்படும். பண்டைய உரையாசிரியர்கள் இருவருமே, எல்லாப் பண்ணிற்கும் அடிமனையாதலின் பட்டடை என்பது நரம்புகளில் இளிக்குப் பெயர் என்றனர். அதாவது ஏனைய விளரி முதலாகவும் தாரம் முதலாகவும் குரல் முதலாகவும் துத்தம் முதலாகவும் கைக்கிளை முதலாகவும் உழை முதலாகவும், தோன்றக்கூடிய பண்களுக்கும் இவ்விளி முதலாகத் தோன்றும் பண்ணும் தோற்றுவாய்க்குரிய இசையும் அடிமனை என்பதாகும்.

இனி, இளியிசை முதலாக ஏழிசைகளையும் குறித்துக் காணுமிடத்து இவ்வாறு வரும்: இளி. விளரி. தாரம். குரல். துத்தம். கைக்கிளை. உழை. இவை யாவும் ஒரு தொகுதியாய் நின்று பண்டைய இசைத்தமிழில் தாரக்கிரமத்தில் இளிமுதலமைந்த ஏழிசை நிரல்களுக்குரிய பாலைப் பெயராகிய கோடிப்பாலை எனும் பெயரைக் கொண்டு நிறுவப்பெற்றதாகும். இம்மரபு சேக்கிழார் காலம்வரை தமிழ் நாட்டில் திரிபடையாது நன்கு வழக்கில் இருந்துவந்துள்ளது.

இன்னும் பல்வேறு இயற்கையான இசையடிப்படை முறைமையை ஆராய்ந்து கண்டாலும், கோடிப்பாலை என்பதே பழங்காலத் தமிழ்நாட்டில் இசைக்கலை வல்லார்களால் முதன்முதலாக இளஞ் சிறுர்களுக்கு இசை பயிற்றுவிக்கும்போது தொடக்கப் பயிற்சிக்குரிய பெரும் பண்ணுகக்கொள்ள நேரிட்டது எனக் கூறிவிடலாம்.

கோடிப்பாலையின் அலகுகள் வருமாறு: அதாவது தற்கால முறையில் பழைய தாரக்கிரமத்தில் கோடிப்பாலையின் தொடக்க இசை இளி. இவ்விளியிசை இக்காலத்தில் ஷட்ஜம் எனப்படுவதால்

| | | | | |
|---|---|---|---|---|
| க — | இளி — | ஷட்ஜம் — | அலகுகள் | 0 தொடக்க இசை |
| உ — | விளரி — | ருஷபம் — | ,, | ச சதுச்ருதி ருஷபம் |
| ௩ — | தாரம் — | காந்தாரம்- | ,, | ச சாதாரணகாந்தாரம் |
| ச — | குரல் — | மத்யமம் — | ,, | ச சுத்தமத்யமம் |
| ரு — | துத்தம் - | பஞ்சமம் — | ,, | ச பஞ்சமம் |
| சா — | கைக்கிளை | தைவதம் — | ,, | ச சதுச்ருதிதைவதம் |
| எ — | உழை — | நிஷாதம் - | ,, | க கைசிகி நிஷாதம் |

ஆக, ஷட்ஜம். சதுச்ருதிருஷபம். சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம். பஞ்சமம். சதுச்ருதிதைவதம். கைசிகிநிஷாதம் என்ற இசைகளை உடைய தற்காலத்திய இராகம் கரகரப்பிரியா என்பதாகும். இங்கே சுருக்கமாகக் கூறவேண்டுமானுல் இக்காலம் நமது கரகரப் பிரியா இராகமே பழந்தமிழ் நாட்டில் கோடிப்பாலை எனப்பட்டு இளஞ் சிருர்களுக்கு தொடக்கப் பயிற்சிக்கேற்ற பெரும் பண்ணுகக் கொள்ளப்பட்டது எனக் கூறிவிடலாம்.

கோடிப்பாலைக்கமைந்த இசைகளின் குறியீட்டெழுத்துக்களையும் இங்கே கூறுகின்றேன். பண்டைய தமிழ் வகையில்,

| | | | |
|---|---|---|---|
| இளியின் குறியீட்டெழுத்து | | ச — | |
| விளரியின் | ,, | ரி — | |
| தாரத்தின் | ,, | க — | |
| குரலின் | ,, | ம — | |
| துத்தத்தின் | ,, | ப — | |
| கைக்கிளையின் | ,, | த — | |
| உழையின் | ,, | நி — | என்பதாம். |

இவற்றை நிரற்படுத்த சரி கம பத நி(ச்) எனவமைவதும் மாறிலாத இயற்கையே. இவ்வடிப்படையான கருத்தினையே மிகப் பழைய இசைத்தமிழ் வல்லார்

சரிகம பதநியென் றேழெழுத்தாற் ருனம்
வரிபரந்த கண்ணினுய் வைத்துத் — தெரிவரிய
வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்கும்
சூழ்முதலாஞ் சுத்தத் துளை — எனக் கூறிப்போந்தனர்.

ஆகவே சரிகமபதநி என்ற குறியீட்டெழுத்துக்கள் மூலம் கோடிப்பாலை தொடக்கப் பயிற்சிக்குரிய பெரும் பண்ணுகக் கைக் கொள்ளப்பெற்ற காலம் முதல், இக்காலம் வரை இசைப் பயிற் சிக்கு சரிகமபதநி என்ற ஏழு எழுத்துக்கள் பயிற்சிக்கும் பாடு வதற்கும் வழக்கில் இருந்து வருகின்றன.

புரந்தரர் காலத்தில், அவர் நாட்டில் பயிற்சிமுறை, அதே பழைய முறையான சரிகமபதநி என்ற எழுத்துக்களால் வேறு பண்ணில் அதாவது, நமக்கு மாயாமாளவகௌள—வேங்கடமகியார் காலத்தில் கௌள—என்ற பெரும்பண்ணில் மாற்றப்பட்டிருக்க வேண்டும். இவர் மாற்றியமைத்தற்குக் காரணங்களையும் ஒருவாறு கூறி எனது பேச்சினை முடித்துக்கொள்வேன்.

நம் தமிழ் நாட்டில் சிவநெறி பரப்பும் மடங்களில் திருவாவடு துறை மடமும் ஒன்று. அம்மடத்தில் தலைவராக விளங்கிய அம்பல வாண தேசிகர் என்பார் ஒரு காலத்தில் இராமனுதபுரம் பூச்சி சீனுவாச ஐயங்கார் அவர்களை, 'ஏன்? நமது சங்கீதப் பயிற்சிக்கு

பதினைந்தாவது மேளமாகிய மாயாமாளவகௌளை எனும் இராகத்தைப் (சரிகமபதநி எனும் இசை நிரல்களை) பயின்று வருகின்றோம்' என வினவினாராம். அதற்கு அந்த இசைப்புலவர், "இசைகள் ஏழில் ஷட்ஜம் பஞ்சமம் எனுமிரண்டும் மாறுபாடில்லாதன, மற்றைய ருஷப காந்தார மத்யம தைவத நிஷாதங்கள் மாறுபாடுடையன; அவற்றுள் ருஷபம் மூன்று வகையாகக் கருதப்படுகின்றது. அவை, சுத்தருஷபம், சதுச்ருதிருஷபம். ஷட்சுருதி ருஷபம், என மூன்று. காந்தாரமும் மூன்று வகையாகக் கருதப்படுகின்றது. அவை, சுத்தகாந்தாரம், சாதாரண காந்தாரம், அந்தர காந்தாரம் என மூன்று. பிறகு மத்தியமம் இரண்டு வகையாகக் கருதப்படுகின்றது அவை சுத்தமத்தியமம், பிரதிமத்யமம் என இரண்டு. தைவதமும் மூன்று வகையாகக் கருதப்படுகின்றது. அவை சுத்ததைவதம், சதுச்ருதி தைவதம், ஷட்சுருதி தைவதம் என மூன்று. நிஷாதமும் மூன்று வகையாகக் கருதப்படுகின்றது. அவை, சுத்த நிஷாதம், கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம் என மூன்று" என்று கூறி இவற்றுள் ஷட்ஜத்திற்கடுத்துள்ள ருஷபங்களில் முதல் ருஷபம் சுத்த ருஷபம் என்றும், ருஷபத்திற்கடுத்த காந்தாரத்தில் அந்தர காந்தாரமே இறுதியானது எனவும் மத்தியமத்தில் முதலான சுத்த மத்தியமத்தையும் கூறி பஞ்சமம் வரையுள்ள (பூர்வாங்கத்தை) முற்பகுதியை விளக்கிப் பின்னர் பிற்பகுதியில் (உத்தராங்கம்) பஞ்சமத்திற்கடுத்த தைவதத்தில் முதலானது சுத்த தைவதம் எனவும் தைவதத்திற்கடுத்த நிஷாதத்தில் இறுதியானது காகலி நிஷாதம் எனவும் விளங்கக்கூறி பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரேயமைப்பாகவும் இருப்பதற்குள்ளே சிறிய ருஷபமும் இருப்பதற்குள்ளே பெரிய காந்தாரமும் இருப்பதற்குள்ளே சிறிய தைவதமும் இருப்பதற்குள்ளே பெரிய நிஷாதமும் வருகின்ற தாய் ராகமான மேளம் இது ஒன்றே (மாயாமாளவகௌள) எனக்கூறி, அதனால்தான் மாயாமாளவகௌளத்தில் முதன் முதலாகப் பயிற்சி தொடங்கப்பெருகின்றது எனக் கூறினாராம். இக்கருத்தை எங்கள் ஆசிரியர் வேதாரணிய இராமச்சந்திர ஐயர் அவர்கள் அடியேனுக்கு நன்கு விளங்கக் கூறினார்கள். இதனடியாக எனக்கு உதித்த இசை நலங்கள் எத்துணையோ உண்டு.

மேற்கூறிய இசை நலங்களை அடிப்படையாகக்கொண்டே கௌள மேளத்தை (மாயாமாளவகௌளையை) பயிற்சிக்குரிய மேளமாகக்கொண்டு இசை நிரல்களையும் (சுராவளி) அணிகளையும் (அலங்காரங்கள்) வகைசெய்து புரந்தரதாசர் அவர்கள் நிறுவியிருக்க வேண்டும். ஆனால் புரந்தரர் காலத்திற்கு முன்னர் அவர் வாழ்ந்த நாடுகளில் பயிற்சிக்குரிய மேளம் (பெரும்பண்) எதுவாக இருந்தது என்ற கருத்துகள் எழக்கூடும். அந்நாட்டில் எந்தப்பண் பயிற்சி செய்யப்பெற்றது என்பதை ஆராய்வதனைவிட நமது தமிழ்ப் பகுதிகளில் எவ்வாறு இருந்ததென ஆராய்வதே சாலச் சிறந்ததானமையினாலே பதின்மூன்றும் நூற்றாண்டிற்கு முன்னர் உள்ள இசைப்

பகுதியினை நம் தமிழ் நூல்கள் மூலம் ஆராய முற்பட்டு வருகின்றேன்.

தொண்டர் சீர் பரவுவாராய சேக்கிழார் எழுதிய பெரியபுராணம் நமக்குச் சில இசையிலக்கண அடிப்படையைக் காட்டுகின்றது. அவர் தடுத்தாட்கொண்ட வரலாற்றினுள்ளும் ஆனாயர் வரலாற்றினுள்ளும் இன்றியமையாத பழைய இசைத்தமிழ்க் குறிப்புகள் சிலவற்றைக் குறித்துச் செய்யுள் வடிவமாகப் பொதிந்து வைத்துள்ளார்.

பழங்காலத்தில் தமிழ்நாட்டுப் பாணர்கள் கையிலிருந்த யாழ்க் கருவிகளில் எழுந்த பெரும்பண்களுள் முதன் முதலானதும் சிறப்பானதுமான பாலைகள் ஏழேயாம். அவை,

க. மேற்செம்பாலை.

உ. செம்பாலை.

ங. படுமலைப்பாலை.

ச. செவ்வழிப்பாலை.

ரு. அரும்பாலை.

சு. கோடிப்பாலை.

எ. விளரிப்பாலை எனப்படும். இவற்றுள் ஆறுவதாய கோடிப்பாலையைப் பயிற்சிக்குரியதாகக்கொண்ட கருத்துகள் அமைந்துள்ளன. கோடிப்பாலையை இக்கால முறைப்பாட்டின்படி கண்டால் இளிக்கடுத்த விளரியும் அதாவது, ஷட்ஜத்திற்கடுத்த ருஷபமும், பிறகு அதேபோன்று பிற்பகுதியில் துத்தத்திற்கடுத்த கைக்கிளையும் அதாவது பஞ்சமத்திற்கடுத்த தைவதமும், முற்பகுதியில் விளரிக்குத் தாரமும், பிற்பகுதியில் கைக்கிளைக்கு உழையும் ஒரேயமைப்பில் அமைந்துள்ளன. இவை இக்காலத்து இசைவாணர்களுக்கும் நன்கு விளங்கும். கோடிப்பாலை தவிர மற்றைய ஆறு பாலைகளுக்கு இவ்வாறான அமைப்பு இல்லை. அரும்பாலையின் அமைப்பு பெரிய இசைகளையே கொண்டுவிட்டது.

பழைய கோடிப்பாலையாகிய தற்காலக் கரகரப்பிரியா என்ற பெரும்பண்ணையும் மாயாமாளவகௌள என்ற பெரும்பண்ணின் அமைதியையும் ஒருங்கு வைத்துச் சில கூறுகின்றேன். இக்கால முறையிலேயே கூறி வருகின்றேன்.

ஷட்ஜம் எனப்படும் இளியும் துத்தம் எனப்படும் பஞ்சமமும் இரு பண்களுக்கும் பொதுவாக எல்லாப் பண்களுக்குமே பொதுவான நிலையில் அமைந்தனவாகும்.

இளி — பொது.

விளரி என்ற ருஷபம் { கரகரப்பிரியாவில்-பெரிது-சதுச்ருதிருஷபம்<br>மாயாமாளவகௌளையில் - சிறிது - சுத்தருஷபம்

தாரம் என்ற காந்தாரம் { கரகரப்பிரியாவில்-சிறிது-சாதாரண காந்தாரம்
மாயாமாளவகௌளையில்-பெரிது- அந்தர காந்தாரம்

குரல் என்ற மத்தியமம் — இரு பண்களுக்கும் ஒன்றே - சுத்த மத்தியமம்.

துத்தம் பொது.

கைக்கிளை என்ற தைவதம் { கரகரப்பிரியாவில் - பெரிது - சதுச்ருதிதைவதம்
மாயாமாளவகௌளையில் -சிறிது - சுத்த தைவதம்

உழை என்ற நிஷாதம் { கரகரப்பிரியாவில் -சிறிது - கைசிகி நிஷாதம்
மாயாமாளவகௌளையில் - பெரிது - காகலி நிஷாதம்

ஆகவே, பண்டைய பாணர்கள், பயிற்சி முறைக்குப் பயன் படுத்திய பாலை கோடிப்பாலை எனவும், அது இக்காலம் கரகரப்பிரிய இராகம் எனவும், அப்பாலையின் இசைகள் விளரி — தாரம் — கைக்கிளை உழை என்பன பெரியதும் சிறியதுமாய் அமைந்திருந்தன எனவும் இப்பயிற்சி முறை பதின்மூன்றும் நூற்றுண்டுவரை வழக்கில் இருந்தது எனவும் பிற்காலத்தில் புரந்தரதாசர் என்பவரால் கௌள மேளத்தினைப் பயிற்சிக்கு உரியதாகக் கொள்ளப் பெற்று அதுவும் பழையவமைதிக்கேற்ப அதாவது பெரியது சிறியதான அமைப்பினைவிட சிறியது பெரியதான அமைப்பினைக்கொண்டிருந்ததால் கைக்கொள்ளப்பெற்று மாற்றப்பட்டதெனவும் ஏறத்தாழ ஐந்து நூற்றுண்டுகளாகவே இவ்வழக்கு தென்னுடெங்கும் உள்ளதெனவும் நன்கு உணரலாம்.

---

தென்னிந்திய கோயிற்சாசனம் பாகம் 3, பகுதி 2.
சென்னை அரசாங்கக் கீழ்த்திசைக் கலையக வெளியீடு (விலை ரூ. 25)
முகவுரை குறிப்புரையுடன் பதிப்பித்தவர் திருவாளர்
தி. நா. சுப்பிரமணியன்.

இந்நூல் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலான பல தலைப்பில் செய்திகளை நமக்கு அறிவுறுத்துகின்றது. வரலாறு முதலான பலவகைச் செய்திகளை அறிவதற்குச் சிறந்த கருவியான கோயிற் கல்வெட்டுகளையும் பிற சான்றுகளையும் ஆராய்ந்து அவற்றில் தாம் கண்ட முடிபுகளை எளிய நடையில் ஆசிரியர் எழுதியுள்ளார். இவ் ஆராய்ச்சிச் செய்திகள் நாட்டின் வரலாறு முதலானவற்றை அறிய விரும்பும் அருங்கலை விநோதரான அறிஞருக்கு அரிய விருந்தாயிருக்கும் என்று கருதுகின்றேன். அவர்கள் எழுதியுள்ள சிலவற்றிற்கு இன்னுஞ் சிறிது விளக்கமிருந்தால் நன்றாயிருக்குமென்று கருதுகின்றேன். எடுத்துக்காட்டாக பக்கம் 1389 இல் 'அக்கினிஷ்டை, என்பதற்கு 'விறகு' என்று உரை கூறியுள்ளனர். 'அக்கினிஷ்டை' என்பது வெறும் விறகைக் குறிக்காமல் நெருப்புடன் கூடிய விறகைக் குறிக்கும் என்பதையும் அது மேலும் இந்தளம், நெருப்பிடு கலம், நெருப்பின் கூட்டத்தையும் குறிக்கும் என்பதையும்

'ஞெகிழி இந்தளம் நெருப்பிடு கலமே
அனற்குவை இன்ன அக்கினிட் டிப்பெயர்' (247)
'நூபுரந் தீயுறு விறகுதீக் கடைக்கோல்
ஞெகிழி என்னும் நெறிய வாகும்' (563)

என்னும் பிங்கல நிகண்டால் அறிதல் கூடும்.

பக்கம் 1439இல் 'தூக்குத்தலரிசி' என்பதற்கு 'நன்றாகக் குத்திச் சுத்தம் செய்த அரிசி' என்று உரை கூறியுள்ளனர். தூக்குத்தலரிசி என்பது தெய்வங்களின் நிவேதனத்திற்குப் பயன்படுவதாகையால் அதனை மிகத் தூய்மையாகக் குற்றித் தயாரித்தனர் என்பதே பொருந்தும்.

தெய்வ நிவேதனத்திற்கு அரிசி குற்றும் முறையை நாட்டு மக்களிடத்திலேயிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டும். மெழுகித் தூய்மையான இடத்திலே உரல் உலக்கை முறம் முதலியவற்றையெல்லாம் கழுவியும் மெழுகியும் தூய்மைசெய்து நெல் குத்துபவர்கள் குளித்துவிட்டு வாய் எச்சில் தெறிக்காதபடி துணியினால் வாயைக் கட்டிக்கொண்டு தங்கள் கால் அவ்வரிசியில் படாதபடியிருந்து பய பக்தியுடன் நெல்லைக்குற்றி அரிசியை நன்கு தயாரிப்பார்கள். இதற்குத்தான் தூக்குத்தலரிசி என்று பெயர். சாசனங்களில் 'தூப்பருப்பு' என்று வருவதையும் காணலாகும். திருக்கோயில்களெல்லாம் தூய்மைக்கு இருப்பிடம் என்று கருதி கோயில் தொண்டுகளை மிகத் தூய்மையாகச் செய்துவந்தனர் அக்காலத்து மக்கள். இக்காலத்து மக்கள் தூய்மையை அறவே மறந்து ஆடம்பரத்திற்கு இருப்பிடமாகக் கோயிற் பணிகளைச் செய்கின்றனர். எப்படி இருப்பினும் இவ்வாராய்ச்சித் தொகுப்பு நம் நாட்டவர்க்குப் பெரிதும் பயன்படுமென்றே கருதுகின்றேன்.

அடிகளாசிரியர், கரந்தை.

280-ம் பக்கத் தொடர்ச்சி.

## தாய்மை.

"ஒப்புரவு"

28. பெண்ணுக்காங் கலையெங்கே, பெருமையெங்கே,
பேதமையாங் கபடில்லாப் பெற்றியெங்கே,
கண்ணுக்கே யொளியெங்கே, கள்ளநோக்குக்
காமுகரை யச்சுறுத்துங் கனல்தானெங்கே?
புண்ணுக்கே யீமொய்த்தாற் போலேயாண்கள்
புலனுக்கே விருந்தாகிப் போவாரன்றி
எண்ணுக்கே யடங்காத வின்பமீந்தார்,
இல்லறத்தை வாழ்வித்தா ரென்பதாமோ?

29. தாய்க்குலத்தைச் சுடுசொல்லாற் ருக்கவில்லை,
தகவிழந்தா ரெப்பகுதி தனிலுமுண்டு;
மாய்க்கவரும் புலியதனைக் கிழிக்கவல்ல
மங்கையரு மிருக்கின்ருர், வாழ்கஅன்னுர்;
சேய்க்கினித்த பாலருத்தி யோடாய்த்தேய்ந்த
திருமகளிர் வாழ்கின்ருர், சிறக்கவன்னுர்;
போய்க்கேண்மின் நாணத்தின் பொலிவையந்தப்
பொற்ருெடியார் கூறியுளம் புளகிப்பாரே.

30. எண்பதுக்கு மேலான தாயும்நாணம்
இருப்பதனைக் காட்டுகின்ருர் செயலா,லின்னும்
கொண்கனையு மேறெடுத்துப் பாரார்வாழ்வில்
கொள்ளையின்பம் பெறுகின்ற மகளிருண்டு;
பண்புடைய ராயிவர்கள் இருப்பதாலே
பறிகொடுத்தா ருரிமையினை யென்பதுண்டோ?
திண்புறுநற் செயலெல்லாம் நாணத்தாலே
செப்பமுறல் காண்கிலிரோ, சிந்திப்பீரே.

31. நுண்ணறிவு, நினைவாற்ற, லினியபேச்சு,
நோன்பிவைக ளெல்லாமும் மாண்பின்சின்னம்;
கண்ணொளியில் மின்னுற்றல், முல்லைப்பல்லிற்
காந்தமிவை இயல்பாகப் பெண்ணின்செல்வம்;
எண்ணில்பல நலங்களெலா மிருந்தாலுந்தாம்
என்னுகும் நாணென்றங் கில்லையானல்?
மண்ணுரும் பேரரசன் வாழ்வென்னுகும்
வாயிலிலே காவல்மட்டும் மறந்துபோனல்?

32. தலைநாணித், தரைநோக்கி, யுடலங்குன்றித்,
தாழ்ந்தகுர லாற்பேசி, யொசிந்துமெல்லக்
கலைநிறைந்த மதிமுகத்தில் உவகைமின்னக்
காலெடுத்து வைக்கின்ற மணப்பெண்காண்மின்,
மலைமுகட்டைப் போற்றலையை நிமிர்த்தி,மிஞ்சும்
வாய்வீச்சு வீசி,யிரு கைகள் வீசிச்,
சிலைதொடுத்த வம்பென்னச் சென்றுமாலை
சேர்க்கின்ற பெண்ணிலையுந் தேர்ந்துபார்மின்.

33. பதியிழந்து மறுமணங்கொள் பாவையேனும்,
பற்றியவெங் கொடுமையில்வாழ் பணிப்பெண்ணேனும்,
வதிவதற்காந் திக்கற்ரு ரில்லம்வாழும்
மங்கையரே யானலும் வளரும்நாணம்;
முதியவர்க ளிளையவர்க ளென்பதில்லை,
முற்றமுற்றப் பக்குவத்தின் முறைமைமாறும்
புதியநிலை யென்றுநலம் பொசுக்கிவிட்ட
பொல்லாப்பு வாழுமிடம் புகுந்துபார்ப்போம்.

34. துகில்சிறிது சோர்ந்தாலுந் துடிக்கும்பெண்ணைத்
தொட்டுநறும் பொடிபூசி, யணிகள்பூட்டி,
முகில்நிகரும் குழல்முடித்துக், கலையின்பேரால்
முகந்திருத்தி விடுகின்ரு ராண்கள்;அப்பெண்
புகிலரங்கி லாடுதற்குக் காமவேட்கை
பொங்குவதைக் காண்கின்ரே, மிந்தவாழ்வு
மிகிலினிமேற் பெண்மையிலே தெய்வங்கண்ட
மேன்மையெலாம் பழங்கதையாய் விலகிப்போமே.

35. சிற்ருடை கட்டியுடல் தெரியக்காட்டித்
தெருவில்வரு மளவுக்கு நாணமென்ற
வற்ருத பெருஞ்செல்வம் வற்றிப்போக
வளர்க்கின்ரேங் கலைகள்;திரைப் படங்கள்தாமே
பற்ருக விளமைநலம் பாழாய்ப்போன
பாவையரைக், காளைகளைப் பார்மின்;மேலும்
முற்ருமல் பெண்குலத்தைக் காக்கவேண்டில்
முறையாக நாண்காக்க முனைகுவோமே.

## அடக்கம்.

36. அடக்கமிரு பாலார்க்கும் பொதுவென்ருலும்
அரிவையருக் காற்றல்தரு மாற்றலாகும்;
மடக்கியொளிர் பட்டாடை செறித்தாலென்ன
வாய்ந்தபெரு நாணத்தை, மென்மைதன்னை
நடத்தையெனும் பெட்டகத்தே வைத்துப்பூட்டும்
நல்லதொரு பூட்டாகும்; நாவைக்காவா
மடந்தையிசை கோவலனை விரட்டித்தென்னன்
மதுரையிலே வீழ்ந்திறக்க வைத்ததன்றே.

37. கண்ணெதிரே துள்ளுகின்ற மானை நாடும்
கருத்தடக்க மாட்டாது கணவற்போக்கி,
மண்ணதிர மூலபலம் நடத்திவைத்த
மைதிலியும் பெண்ணன்றோ? வாழ்விலெங்கும்
அண்ணனொடு தம்பிகொளும் பகைமைகாண்மின்;
அருமையுற வினர்க்குள்ளே பிளவுகாண்மின்;
எண்ணரிய வழக்குகளை எடுத்துப்பார்மின்;
இவைபலவுட் பெண்செயலே இருக்கும்வேராய்.

38. வளத்தக்க வாழ்வுடையாள், தன்னைக்காக்கும்
வலிவுடையாள், சொற்காக்கு மனத்தாளென்றே
கொளத்தக்க நெறியெல்லாங் கூறிப்போன
கோமான்றன் குறிக்கோளைக் கூர்ந்துபார்மின்;
குளத்துக்கே கோலியமட் கரையின்வன்மை
கொண்டலவோ மதகுநெறிக் கொள்ளுந்தண்ணீர்;
உளத்துக்கே கரைகோலார் மனைவாழ்வென்னும்
ஒருநெறியோ பலநெறியி லுடைப்புக்கொண்டால்?

39. தேனூற்றைப் போலொழுகும் பெண்மைப்பேச்சுச்
சிறைகடந்து போமாயின் செல்லும்பாதை
கானூற்று வெள்ளத்தின் போக்கேயாகும்,
கட்டுக்கே யடங்காது சிறிதுபோதில்
தானூற்றல் குன்றிவெறி சாகித்தாழும்
தன்மையிது மென்மையினுற் சார்தலாகும்;
மீனூற்றல் நீர்நிலையி லன்றோ, பெண்வாய்
வீச்செல்லாம் நிறைகாக்கு மிடத்திற்றானே.

40. நடையடக்கி, நாவடக்கி, நலங்கள்தேக்கி,
நாகரிக மென்றுலகோர் நவிலுமிந்நாள்
உடையடக்கி, யூதியத்துக் குயர்ந்துபோகும்
உணர்வடக்கி, யறைப்பேச்சம் பலமாகாதே
மடையடக்கி யில்லறத்தை வளர்க்கும்பெண்ணை
வாழ்த்தாத நாடுண்டோ? வருந்தியீன்று
பெடையடக்கிக் குஞ்சுகளைக் காத்தல்போலே
பேணுதலாற் பெண்மைநலம் பிறங்குமன்றே

41. சீரெடுத்த பெண்ணியற்கை சிறிது சொன்னேன்,
சேராத பிறநலமுஞ் சேர்த்துக்கொண்மின்;
யாரெடுத்து முழுமைபெறச் சொல்லவல்லார்?
அம்புவியிற் கண்டவெலா மடுக்கிப்பார்த்தேன்,
பேரெடுத்த நூற்பொருளும் பெய்துவைத்தேன்
பின்னையும்நான் மனநிறைவு பெற்றேனில்லை;
ஊரெடுத்த புகழாளன் பொருட்பால்வைத்த
ஒழிபியலைப் போற்சிலநான் உளறிவைப்பேன்.

## தாய்மைத் தகவு.

42. அடுப்பூதிப் பார்த்தவொரு ஆணைக்கேண்மின்,
“அம்மம்மா, அரிவையர்க்கே பொறுமை”யென்பான்!
கடுப்பாகிப் பிள்ளைகளைப் புடைப்பான்சொல்வான்
காரிகையின் சொல்லினிமைக் கட்டுப்பாட்டை;
எடுப்பாளாய் நோயுற்ற குழந்தைதன்னை,
இரவெல்லாங் கண்விழித்தே யிருப்பாளாய்ப்,பெண்
தடுப்பாளாய்த் தன்னலத்தைக், கமலமன்ன
தண்முகத்தைக் கொண்கனுக்குந் தருவாளன்றே.

43. வாய்த்தவயி றூடொருபெண் ணிருந்துபெற்று,
வாயூறுந் தாலூட்டிப் பாலுமூட்டிச்,
சேய்கழிக்கு மலமெடுத்து, நறுநீராட்டிச்,
செய்வனவெ லாந்திருந்தச் செய்து,கொண்கன்
போய்த்திரும்பு முன்னேநல் லுணவுமாக்கிப்
போட்,டிருண்ட கூந்தலிற்பூ முடித்துப்,பிள்ளை
வாய்க்கிளர்ந்த மழலையுந்தன் னெழிலுந்தந்து
வளர்க்கின்றா ளின்பமெலாம் வளர்கின்றாளே.

## மறைப்பு.

44. பெண்ணிருவர் மூவரெனக் கூடிக்கூடிப்
பேசிடுவர் உள்ளுணர்ச்சி பேசித்தீர்ப்பர்,
நண்ணியவெந் துயரெல்லாங் கண்ணீரூற்றி
நன்றாகக் கழுவிடுவர்; நலிந்துவாடும்
பெண்ணேனும் பிறரேனும் கண்ணிற்கண்டால்
பீழைதமக் காஞற்போல் பெய்வர் கண்ணீர்;
உண்ணுணி யச்சத்தால் மறைத்த செய்தி
உலகமெலாந் தகர்ந்தாலு முதிர்க்கமாட்டார்.

45. அறுந்தநரம் புச்சிலந்தி யுள்ளேபோன
வதுபோல, வாமையினை நடங்கல்போல,
பருந்தெடுத்து விழுங்கியவோர் மீனைப்போலப்
பாவைமறை யாராலும் பறிக்கலாகா;
பெருந்திருவி னச்சமெலாம் பெண்மைக்காகும்
பிழையாலே யாதலினல் பெற்றோர்காப்பாய்
இருந்தாலே, கொண்டவன்றா னின்பவூற்றாய்
இயன்றாலே மறைப்பினுக்கு மிடமிராதே.

## அகமுடையான் அகமுடையான்.

46. கொண்டவனி னன்புக்கே நாத்திமாமி
கொழுந்தனிவ ருரிமைகொளின் கொதிக்குந்,தன்னை
அண்டியவர் வந்தாலு மாடித்தீர்க்கும்
அகமுடையா னகமுடையா ளுதலாலே

மண்டியதன் அன்பாலே பின்னற்போட்டு
மடக்கிவிடும், மகப்பேற்ருல் வலிதாய்ப்பூட்டும்;
கண்டனைய மொழியாள்,பெண் தெய்வ,மெந்தாய்
கட்டுகின்ரு ளுலகத்தைக் கருத்தினுலே.

## பெரிய தெய்வம்.

47. தாயுலகம் புரக்கின்ற பெரியதெய்வந்
தானுக வேண்டு,மவள் தன்னை மற்ருேர்
பேயென்ருே, தீமைபிறப் பிடமென்ருே தான்
பீழைதரப் பேசுவதைப் பெயர்க்கவேண்டும்!
சேயென்றே பாவாடை கட்டியாடித்
திரிகின்ற பருவத்தே திருத்திவிட்டால்
வாயொன்று நலமொன்ருே, எண்ணஞ்செய்கை
வளமொன்றப் பெண்மைநலம் வளருமன்றே.

## நலம் நசுங்கிப் போகாமல்.

48. வாளுறைக்கு ளிருந்தாற்போற் கூர்மையான
வாயுரையும் வேண்டுங்கால் வருதல்வேண்டும்;
கோளுரைக்கும் பழக்கத்தைக் கண்டபோதே
கொய்துவிட வேண்டு,மழ குமிழும்பெண்தான்
தாளிருந்தே யுச்சிவரை யணிகள்பூட்டித்
தற்பெருமை கொள்ளுதலைத் தவிர்க்கவேண்டும்;
நாளுக்கு நாள்விரைந்து வளரும்பெண்மை
நலம்நசுங்கிப் போகாமல் நாம் காப்போமே.

## ஆட்டமும் பாட்டும்.

49. ஆடுவதிற், பாடுவதி லளவுகாட்டி,
அரங்கேற்றி வைப்பதிலே யழுத்தங்கொண்டார்
நாடுகலை கலைக்கன்றி யுணர்ச்சிதூண்டும்
நலிவுதனக் கிலையென்றே குடும்பவாழ்வு
தேடுதலை குறியாக்கிக், கல்வி கேள்வி
சேர்ப்பதிலே யூக்கி,மனை திகழும்வண்ணம்
பாடுபடும் பழக்கத்தில் மெல்ல மெல்லப்
படியவைத்துக் காண்பார்கள் பயன்காண்பாரே.

## எதிர்கால வாழ்வு காப்பீர் !

50. பெற்ருேர்தம் பழக்கங்கள் பெரிதுஞ்சாரும்,
பீடிலவாஞ் செயல்மொழிகள் பெரிதுங்காப்பீர் ;
மற்ருேர் தம் மனைபோதல் காத்து,வீணே
வாயாடல் காத்,துடலின் வன்மைகாத்து,
வற்ருத வின்பத்தா யறிவுத் தாயை
வளர்ப்பதிலே யெதிர்கால வாழ்வுகாப்பீர் !
முற்ருத படியேதோ வெழுதிவைத்தேன் ;
முரண்காணிற் பொறுப்பாரால் மொய்ம்புளாரே.

வாழ்க தமிழன்னை !

சென்ற இதழின் தொடர்ச்சி.

# நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி.

(பதிப்புரிமை ஆசிரியருக்கு)

[ K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை. ]

இனி, பவளம், முத்து என்பனவற்றின் இயல்பினை எடுத்துக் காட்டுவாம். பவளம் பெரும்பாலும் தொடு கடலினின்றே எடுக்கப்படுமென்பது,

'பொன்றிரண் டன்ன புரிசடை புரளப்
பொருகடற் பவளமொ டழனிறம் புரைய'

என்ற ஆளுடைய பிள்ளையாரது திருவாக்கால் நன்கறியப்படும். கடலின்கண் சின்னஞ்சிறு பூச்சிகளாலாக்கப்படும் ஒருவகைக் கொடியே கொடிப் பவளமெனப்படும். இத்தகையது நல்லொளி வீசாது பவளப் பாறைகளிலும், பவளத் தீவுகளிலும் கிடைக்கப் பெறினும், நவமணிகளிலொன்றாய்ப் பண்டைத் தமிழர் போற்றிவந்தனர். நன்றாய் முற்றித் தேர்ந்த கொடிப்பவளம், தாமங்களாகவும், தூண்களாகவும், பண்டைக் காலத்தில் விளங்கி வந்த உண்மை,

'வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்
சாதிகளாய பவளமு முத்துந் தாமங்கள்
ஆதியாரூ ராதிரை நாளா லதுவண்ணம்'

என்ற ஆரூர் திருவாதிரைப் பதிகத்தானறியப்படும். மற்றும்,

'பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை'

எனும் சிலப்பதிகாரத்து அழகிய தொடர்கொண்டும், இது துணியப்படும்.

செம்மை மீக்கூர கொழுவிதாக வளர்ந்த கொடிப்பவளத்தை செங்கொடி வல்லி என்பர் செவ்விய அறிவினர். இது தனித்தும் அல்லது முத்தொடு கலந்தும் பணிகளிற் பயன்படும். செங்கொடி வல்லி அழகுணர்ச்சிக்கு இன்பம் அளிக்கக்கூடிய தன்மையினை இயல்பாகப் பெற்றிருப்பதனைக் கண்ட ஆளுடைய அரசு, தன்னுணர்ச்சிப் பெருக்கால் ஆய்தற்கியலாத தத்துவங்களுக்குள்ளும் நுழைந்து எவ்விடத்தும் பரந்து காணும் இறைவனை,

'பவளத் தடவரை போலுந் திண்டோள்
களத்தோண் மிசையே

பவளக் குழை தழைத் தாலொக்கும்
பல்சடை யச்சடைமேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக
நாகமந் நாகத் தோடும்
பவளக்கண் வாலமதி யெந்தை
சூடும் பனிமலரே என்பர்'

என்ற தனித் திருவிருத்தத்தால் இசைத்துப்பாடி நமது உள்ளத்தில் எழும் உணர்ச்சியினை உன்னத நிலைக்கு உயர்த்துவாராயினர்.

நல்ல கொடிப்பவளம், சிந்தூரம், செம்மண், ஈச்சத்துச் செங்காய், கமுகின் செம்பழுக்காய், தூதுவழுதுணம் பழம், முசுமுசுக்கைக் கனியுமாகிய இவை போன்ற நிறமுடையதாய் விளங்கல் வேண்டும். செவ்விதாய்ப் பழுத்த கோவைப் பழம், செவ்வரத்தம் பழம் ஆகியவற்றின் நிறம்போன்றும் பச்சைக் கிளி மூக்கின் நிறம் போன்றும் இருக்கும் பவளங்கள் மிகவும் உயர்ந்தவை. மற்றும் அவை விலைமதிக்கவொண்ணாதவை. இதன் குற்றங்கள், செந்நிறமில்லாது வெண்ணிறங்கொண்டும், பழுப்பு நிறமுங்கொண்டிருத்தல், கனத்த நிறையிலாதிருத்தல், கருவிலே திருவிலாது புள்ளி துளை முதலாயவற்றோடு கூடியிருத்தல், கல்லிடுக்குகளிற்பட்டு முடங்கிப் பறவையினங்களின் கூட்டைப்போன்று முடிச்சுக்கட்டியிருத்தல், காடு, மொரட்டாய் திருக்கு முறுக்கிக்கொண்டிருத்தல் என்பனவாம்.

'கருப்பத் துளையவும் கல்லிடை முடங்கலும்
திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்'

என்ற சிலப்பதிகாரத்து மெய்யுரைகொண்டும் ஐயுறவின்றித் தெளிந்துகொள்ளப்படும். இக்குற்றங்களினின்றும் நீங்கிச் செந்நிறமும் உருட்சியுமுடைய கனத்த நற்பவளங்கள் சிறப்புடையனவாய் விளங்குமென்க. இதுபற்றி ஆளுடைய அரசு, பவளச் சோதியிடம் காட்டும் தமது அன்பைத் தமக்கும் இறைவர்க்குமுள்ள தொடர்பாகக்கொண்டு இறைவனைத் 'தொழற்பாலதே' யென்னும் திருக்குறுந்தொகை'யில் குறிப்பிட்டுக் கூறுவது வருமாறு.

முத்தொப் பானை முளைத்தெழு கற்பக
வித்தொப் பானை விளக்கிடை நேரொளி
ஒத்தொப் பானை யொளிர் பவளத்திரட்
டொத்தொப் பானைக்கண் டீர்தொழற் பாலதே!

பண்ணைத் தானைப் பவளந் திரண்டதோர்
வண்ணத் தானை வகையுணர் வான்றனை
எண்ணத் தானை யிளம்பிறை போல்வெள்ளைச்
சுண்ணத் தானைக்கண் டீர்தொழற் பாலதே!

அப்பர் இறைவனைக்கண்டு வாயார வாழ்த்திய இப்பண்கள் மிக்க விம்மிதம் பயப்பதாயிருக்கின்றன. இம்முறையில் இறைவனைக் காணும் அனுபவத்தின் அழகிய சொல்வடிவமாக எழுந்தது 'முத்துமாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி' (அதிசயப் பத்து—7) என்ற மணிவார்த்தை. தன் கண்ணுக்கு விருந்தாயிருந்த அண்ணலை மணிவாசகர் தன் செவிகளும் விருந்தாட்டயருமாறு வாசகமொன்று வேண்டி 'பவளத் திரு வாயால் அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன்' என்று பரவியதில் 'பவளத் திருவாய்' என்றது செவ்வொளி பரப்பி அருள் நிலவி நிற்கும் இறைவரது எழில்நிலை நோக்கியென்க. இறையின் திருநீற்றை முத்துக்கும் திருமேனியைப் பவளத்திற்கும் உவமைப்படுத்தி விளக்கும்,

'முத்துநீற்றுப் பவளமேனிச் செஞ்சடையா னுறையும்
பத்தர் பந்தத்தெதிர் கொள்பாடிப் பரமன்'

என்ற சுந்தரரின் செந்தமிழின் இந்தளப் பண் இங்கு நினைவிற் பதிக்கற்பாலது.

நற்பவளத்தைப்போற்றி அணியும் பெண்மணிகள் இயற்கையியல்பொடு தளிர் ஒளிர் மேனியராய் வயங்குவர். மற்றும் மனைமாட்சியுடையராய் பெருஞ்சிறப்பும் பெருந்தகவும் மன நல வாழ்வும் புகழும் பேறும் பெறுவர். நற்பவளங்கள், அணிவோர்க்கு மன உறுதி உயர்ந்திட நலங்கொடுக்கும். நற்குண நற்செய்கைகளில் அணிவோரை ஈடுபடுத்திக் குறைவற்ற செல்வம், குடிப்பிறப்பின் சிறப்பியல்பு ஆகியவற்றை ஓங்கச்செய்யும். வன்கணார் கொடுமையை எதிர்த்திடப் பலமுங் கொடுக்கும். அவை பொதுவாகப் பெருமையும் வளனும் துளங்கா மாட்சியையும் தரும். பிறன் பழிப்பிற்கிடமிலாது, மனத்தையும் பொறிகளையும் நிறைமுறையாக அடக்கும் அருமை நற்பவளத்திற்குண்டு.

பெரும்பாலும் எளிதே பவளமும் முத்தும் நெடுங்கடலினின்றே எடுக்கப்படுவன. அவை அகப்பொருட்டுறையில் இயல்நிலை கூறும் இலக்கியப் புலவர்களது செந்நாவிலும் சேர்ந்து பயின்று வருவன; மற்றும் மாதரார் அணிகளிலும் சேர்ந்தும் பயன்படுவன. 'திருப்பவளத்து முத்தரும்பும்' என்ற குமர குருபரரது வாக்கில் முத்து உவமை யாகுபெயராய் பவளமன்ன வாயகத்துப் பல்லையுணர்த்தியது காண்க. ஈண்டு எயிற்றினை,

வெண்ணிற முத்தென இயற்கை எழிலுடன் வியக்கத்தகும் வகையில் விளக்கப்பட்டதறிக. 'சத்தி முத்தம் கண் முறுவல்' என்ற கோடீச்சுவரக் கோவையின்கண் (சத்தி, கண், முத்தம், முறுவல்) உருவ இயலை உருவக வகையில் வைத்து உணர்த்தப் பட்டது இனிதறியலாகும். 'முல்லையும் கடல் முத்தும் எதிர்ப் பினும் வெல்லும் வெண்ணகையாய்' (கம்ப ராமாயணம்) 'தாழ் நீரமுத்தின் தகையேய்க்கு முறுவலாய்' (கலித்தொகை) 'முத்தேர் வெண்பல் முகிழ் நகை மடவரல்' (ஐங்குறுநூறு) 'துப்பனவாயும் முத்தொளி முறுவலும்' (பெருங்காதை) 'முத்திலங்கு முறுவல்' (சம்பந்தர் தேவாரம்) என்பன இவண் எண்ணற்குரியன.

### முத்தின் ஏனைய பிறப்பிடங்கள்.

'எண்டருதே சிடையளவே விலைகோடன்க
ணியைந் தவற்றி னொளிபரத்தல் பத்திபாய்தல்
தண்டாளத் தியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பிற்
சங்கினின்மீ னின்றலையிற் றழைநெற்றுளில்
ஒண்டொடிமங் கையர்களத்தி லியானைக்கோட்டி
லுயர்கழையிற் காகவாக னர்திண்டோளிற்
கொண்டலிலிப் பியிலேனக் கொம்பிலிக்கிற்
கொக்கிலெனப் பகர்வர்வியப்பிப் பிமுத்தால்'

என்ற திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தானறி யப்படும்.

நந் தமிழ் நாட்டையடுத்துள்ள தொடு கடலின்கண் தமிழ் மக்கள் முத்து மூழ்கியெடுப்பது தொன்றுதொட்டுவந்த வழக்க மாயுளது. பைந்தமிழ்ச் சுவை பருகும் பாவாணர்கள் கொற் கையம் பெருந்துறை ஒளிமிக்கச் சிறந்த முத்துகளை விளைவிக்கும் சிறப்புடையதென்பர். மற்றும் குமரித் துறையிலும், பொதியத் தருவியிலும், பொருனையாற்றிலும் விலைமதிக்கவொண்ணா ஒளி மீக்கூர்ந்த பெரும் பருமன்கொண்ட நல்முத்துக்கள் கிடைக்கப் பெறும் அருமையினை குமரகுருபரர் எழிலுற

'கோடும் குவடும் பொரு தரங்கக்
குமரித் துறையிற் படுமுத்தும்
கொற்கைத் துறையிற் றுறைவாணர்
குளிக்குஞ் சலாபக் குவான்முத்தும்
ஆடும் பெருந்தண் டுறைப்பொருநை
ஆற்றிற் படுதெண் ணிலாமுத்தும்
அந்தண் பொதியத்தடஞ் சாரல்
அருவி சொரியும் குளிர்முத்தும்'

என எடுத்தியம்பியுள்ளார். (தொடரும்)

# * கங்காதேவி எழுதிய மதுரா விஜயம்.

[நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.]

நாட்டம் புதைக்கின்ற தென்னீ மடந்தை நவகண்டமே
லீட்டம் புகழ்வின்னன் மேவா ரெனவிங்ஙன் யான்வருந்த
வாட்டம் பயின்ருங் ககிலின் குழம்பணிந் தாகமெங்கும்
வேட்டந் தெரிகின்ற கொங்கைக ளென்னை மிகைசெய்தவே. [6]

நாகைக் குலமுகில் மமமததன பூவகைககக ஞண்மலர்மேற்
ரேகைக் குரியவன் சோனக்குரியவன் றுங்கவெற்பா
பாகைத் தருசொல்லி மென்முலைப் பாரமும் பார்த்திடையென்
ஞகைக் கிருந்த தென்ருளெம்மை நோக்கிநின் றம்மனையே. [7]

இச் செய்யுள்களால், இவர்கள் கலிபாவின் வழிவந்தவர்கள் என்றும், அஞ்சு வண்ணம் என்னும் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், யவனர்கள் என்றும், சோனகர் என்றும் அழைக்கப் பெறுவர் என்றும், 'அல்லா' என்று சொல்லி வழிபாடு செய்பவர் என்றும், எல்லாவகைத் தந்திரங்களும் கற்றவர் என்றும், யானைகள் தேர் முதலிய சிறப்புக்களை (படையுமாக இருக்கலாம்) உடையவர் என்றும், தங்களால் அபயம் அளிக்கப்பெருதவர்கள் ஊர்களை அழிக்கும் திறன் உடையவர்கள் என்றும் தெரியவருகிறது. நற் பண்புகளும் ஈகையும் உடையவர்கள் என்றும் குறிப்பிடப்பெறுகிறது. இங்கு குறிக்கப்பெற்றுள்ளவர், மகமதியர் படையெடுப்புக்கு முந்திய வரா அல்லது பிந்தியவரா? என்பதும் ஆராயவேண்டும். அவர் களுடைய நற்பண்புகளோடு பின்பற்ருரை அழிக்கும் திறலும் குறிப் பிட்டுள்ளது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

இவர்கள் வாழ்ந்த நாட்டை வச்சிரநாடு என்றும், இவர்க ளுடைய சிறப்பான பட்டினத்தை வகுதை என்றும், இச்செய்யுள்கள் குறிப்பிடுகின்றன. பிற்காலத்திய பெருவள்ளலாக விளங்கிய சீதக்காதி என்னும் சிறப்புற்ற மகமதிய வணிகரின் நாட்டையும் நகரத்தையுமே இச்சொற்கள் குறிக்கும் எனச்சிலர் கருதுகின்றனர். ஆனுல் இப்பெயர்கள் சீதக்காதியின் நாடு நகரங்களுக்கேயன்றி வேறிடங்களுக்கும் பழமையாக வழங்கப்பெற்று வந்தன என்பதையும் அப்பழம் பெருமையைக் கருதியே சீதக்காதியின் நாடுநகரங்களையும் இப்பெயர்களால் புலவர்கள் புனைந்திருக்கக்கூடும் எனவும் கருதலாம். வச்சிரநாடு என்பது தமிழிலக்கியத்தில் சிலப்பதிகார காலத்திலேயே

* மதுராவிஜயம் — வடமொழிநூல் — கங்காதேவி இயற்றியது. ஆங்கில மொழி பெயர்ப்பு. பதிப்பாசிரியர் திரு S. திருவேங்கடாச்சாரியார் — அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடு.

காணப்பெறுவதொன்ருகும். அந்த நாடு சோணையாற்றங்கரையில் உளது. சங்ககாலத்துச் சிறப்புற்ருேங்கிய பாடலிபுரத்திற்கு அண்மையில் உள்ளது. இந்நாட்டிற்கு வச்சிரநாடு என ஏன் பெயர் வந்ததென்பதையும் சிலப்பதிகார காலத்தில் அங்கு வாழ்ந் தவர் எம்மரபினர் என்பதையும் ஒருவாறு நாம் ஊகிக்கலாம். பழங் காலத்தில் மேல்நாட்டுப் பேரரசின் தலைநகராகிய 'ரோம்' நகரத் துடன் நம்நாடு வாணிகத்தால் நெருங்கிய தொடர்பு கொண் டிருந்தது. ரோமிற்கும் வடஇந்தியாவுக்கும் நடந்த வாணிகம் பெரும்பகுதியும் அராபியர் முதலிய செமிதேய மரபினராலேயே நடைபெற்று வந்துள்ளது. ரோம் நகரத்திலிருந்து பாடலிபுரத்திற்கு வரும் வாணிகவழி செமிதேய நாட்டையும் கடலையுங் கடந்து மேற்குக் கடற்கரைத் துறைமுக வழியாக ஏறி உள்நாட்டிற் புகுந்து சோணையாற்றங்கரை வழியாகச் சென்றிருக்கிறது.

அப்பொழுது வாணிகம் செய்துவந்தோர் பாடலிபுரத்திற்கு அருகில் தாங்கள் தங்குவது வாணிகத்திற்குத் துணையாக இருக்கு மென்னுங் கருத்தோடு சோணையாற்றங்கரையில் தங்கி இருக்கக் கூடும். சோனகர் என்ற பெயர் சோணையாற்றின் கரையில் தங்கி இருப்பவர் என்னும் பொருளில் வழங்கியிருப்பினும் இருக்கலாம். இவர்கள் தங்கிய நாட்டிற்கு தங்கள் பழம்பதிகளின் ஒன்றின்பெயரை அச் செமிதேய மரபினர் வைத்திருந்து பின்னர் அப்பெயர் வச்சிர நாடென மாறியிருப்பினும் இருக்கக்கூடும்.

வச்சிரநாட்டு மன்னன் எனச் சிலப்பதிகாரத்தில் கூறப்படுவது அரசு விழை திருவினையுடைய வணிகர் கூட்டத்தலைவனுக இருக்கக் கூடும். இவன் கரிகாலனுக்குப் பகைவனுமல்லன் நண்பனுமல்லன் என உரையாசிரியர்கள் கூறுவதிலிருந்து, இவன் வேற்று நாட்டி லிருந்து குடியேறிப் பெரும்பொருளீட்டிய செல்வப்பெருக்கினன் என்றும் உள்நாட்டுப் பேரரசர்களுடன் மாறுபாடின்றி ஒத்தஉற வோடு வாழ்ந்தவன் என்றும் எண்ணுவது பிழையாகாது.

வகுதை, வகுதாபுரி எனக்கூறப்படும் பட்டினங்கள் செமிதேய நாட்டில் உள்ள பாக்தாத் என்னும் சிறந்த நகரமேயாகும். அந்தப் பெயரையே அந்நாட்டிற்குத் தொடர்புடையவர் நம்நாட்டில் அவர்கள் தங்கிய இடங்களுக்கும் சிறப்பாகப் பெயரிட்டுள்ளார்கள்! இக் கருத்துக்களெல்லாம் ஆராய வேண்டியவை என்ற அளவில் கொள்ளத்தக்கவையேயன்றி முடிவானவை என்று கொள்ள வேண்டுவன அல்ல.

மேற்கூறியவைகளிலிருந்து செமிதேய நாட்டார் இஸ்லாமிய சமயம் தோன்றுவதற்கு முன்பிருந்தே நம் நாட்டோடு தொடர்ந்து வாணிகத் தொடர்புடையவர் என்பதைக் குறிக்கின்றன. தமிழ் நாட்டில் தமிழ்நூல்கள் பலவற்றுள்ளும் இவர்களுடைய குதிரை வாணிகம் கூறப்பெற்றுள்ளது.

உண்ணமு தருத்திளனே யோநகர் கொணர்ந்த
துண்ணெனு முழக்கின துருக்கர்தர வந்த
மண்மகடன் மார்பினணி வன்னசர மென்னப்
பண்ணுறு வயப்புரவி பந்தியி னிரைத்தார்

என்னும் செய்யுளில் கம்பர் செமிதேய மரபினரில் துருக்கர்களேயும் அவர்கள் கொணர்ந்த குதிரைகளேயும் குறிப்பிடுகின்ருர்.

செயங்கொண்டாரும்,

இவர்கள் கப்பல் வாணிகத்தில் சிறந்து விளங்கியமையாலும், பல கப்பல்களே உடையவர்களாக இருந்தபடியாலும், 'மரக்கலராயர்' எனப் பெயர் பெற்ருர்கள் என்றும், பின்னர், அப்பெயர் திரிந்து 'மரக்காயர்' என வழங்குவதாயிற்று எனவும் கூறுகின்றனர். பாண்டியர்கள், இந்த மகமதிய வணிகர்களுக்கு அளவுகடந்த ஆதரவு கொடுத்து வந்திருக்கின்றனர். கி. பி. 1290 அளவில், காயற்பட்டினத்தில், ஜமாலுதீன் என்னும் ஒரு அராபியக் குறுநில மன்னன், ஒரு வாணிக நிலேயம் ஏற்படுத்தி அரசுவிழை திருவில் ஆணே செலுத்தி வந்திருக்கின்ருன்; அந்த நிலேயத்தின் தலேவனுகத் தன் தம்பியாகிய அப்துர் ரஹ்மான் என்பவனேக் காயற்பட்டினத் திலேயே குடியேற்றி வைத்தான். அவன், அருகிலுள்ள பல துறை முகப்பட்டினங்களிலும் கிளே நிலேயங்களே நிறுவினுன். அராபிய நாட்டுக் குதிரைகளேப் பாண்டியர்களுக்கு விற்பதன் மூலமாக இவர்கள், பாண்டியரது பெரு நிதியைச் சிறுகச் சிறுகக் கொள்ளே கொண்டார்கள். இங்கிருந்தே சீன முதலிய இடங்களோடும் இவர்கள் தொடர்புகொண்டனர். பாண்டியர் ஆட்சியில் இவர்கள் மிகவும் செல்வாக்கு உடையவர்களாகித் தமிழ் நாட்டில் நடைபெறும் அயல்நாட்டு ஏற்றுமதி இறக்குமதிகளே எல்லாம் தங்களுடைய கண்காணிப்பில் நடப்பதாக ஏற்பாடு செய்துகொண்டு வெளிநாட்டு வாணிக வருவாய் முழுவதையும் உரிமையாக்கிக்கொண்டு பாண்டியரின் அயல்நாட்டுத்துறை அமைச்சர் என்றும் பெயர் செய்து கொண்டார்கள். அப்துர் ரஹ்மானும், அவனுக்குப்பின் அவன் மகன் சிராஸ்உத்தீனும், பின்னர் அவன் பெயரன் நிஜாம் உதீனுமாக, மூன்று தலேமுறையாகத் தொடர்ந்து, பாண்டியரின் ஆதரவில் அயல்நாட்டு வாணிகத்தைத் தமதாகச் செய்து பெரும்பொருள் ஈட்டி அரசாங்கத்திலும் பெரும் செல்வாக்குடையவர்களாக இருந்து வந்திருக்கிருர்கள். இதோடல்லாமல், பாண்டியர்கள் படையிலும், போசலர் படையிலும் பதினுயிரக்கணக்கான மகமதியப் பணியாளர்களும் வீரர்களும் ஊதியத்திற்கு அமர்ந்து நாட்டைக் காவல்செய்து

வந்திருக்கிருர்கள்! வடநாட்டில் இந்திய மக்களுடைய உயிரும், உடைமையும், உரிமையும், உள்ளத்தில் உயர்வாகப் போற்றப் பெற்றன எல்லாமும், மகமதியர்களுடைய வாளுக்கு இரையாகி அழிந்து இந்திய மக்கள் பெருங்காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு போல் கலங்கிச் சுழன்று நிலைகுலைந்து உடையும் காலத்திலெல்லாம் தென்னுட்டில், மகமதியர்கள், அரசாங்கத்தில் செல்வாக்குடையவர் களாகவும், அயல்நாட்டு வாணிகத்தின் தலைவராகவும், படை வீர ராகவும், பெரு வணிகராகவும் தங்கி, அரசரது ஆதரவும் மக்களுடைய இணக்கத்தையும் பெற்று வாழ்ந்திருப்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொன்ருகும். இத்தகைய நிலைகளை ஆய்ந்து காணும் படிப்பினைகளே வரலாற்றுப் படிப்பின் உயிர்நாடியாவன என்பது யாவரும் உணர்ந்ததே. இவ்வாறு கலக்கமின்றி, தமிழ் மக்கள், அராபியநாட்டு மகமதியரோடு வாழ்ந்துவந்த காலத்தில், பதினன் காம் நூற்ருண்டின் முற்பகுதியில், மகமதியர் பெரும்படை தென்னுடு புகுந்தது. தென்னுட்டில் மகமதியர் புகுந்து ஆட்சி செய்ததையும், பின்னர் அவர்களை அடக்கிக் குமார கம்பண்ண உடையார் முன்னைய முறை ஆட்சியை நிலை நிறுத்தியதையும், தமிழ் நூல்களுள் நாம் பரக்கக் காணக்கூடியது என எதிர்பார்ப்போமாயின், மிகுதியாக ஒன்றும் கிடைக்கவில்லை. இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ளது, 'பாண்டியர் வழிமுறையை'க் காட்டும் ஒரு உரைநடை நூலேயாகும். இந்நூல், 'இராமநாதபுரம் மதுரை திருநெல்வேலி' மாவட்டத்தின், தண்டல் நாயகமாக இருந்த வேத்லி (Mr. Wheatly) என்னும் ஆங்கிலேயர் தொகுப்பிலிருந்து கி. பி. 1825-ல், தெய்லர் Mr. (Taylor) என்னும் கிறிஸ்தவ சமய போதகருக்குக் கிடைத்து; அவரால் மூலத்தை ஒரு சிறிதும் மாறுதலின்றி கி. பி. 1835-ல் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பெற்றது. அப்புத்தகத்தில் கண்டபடியே, *இப்பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

'கலியுகம பிறநது —ஞு ச௦சாஉயிரு—சாலீவாகன சகாதறம ௦உாசயிகூஞு — இதுவரைககும இநத மதுரை மணடலமாரசசிய மாணட பெர்களை அநதப பாணடிய வஙகிசததில சிறுது பெர்கள சிறுதுனளரு சசிய பரிபாலனம பணணினர்கள இபபொது சொனனருசாககளில சிறுது பெர்கள பாணடியனை நிராகரிச சுருச சியம ஆணடார்கள அபபொதெலலாமயிவர்கள மறற கிருமஙகளில ஒதிஙகியிருநதார்கள அபபடி யிருககுமளவில வாளால விழிதது

(* இப்பகுதி நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பெற்றிருக்கலாம்; உரை நடையும் எழுத்து முறையும் இக்காலத்தவர் தெரிந்துகொள்வதற்காகவே, திருத்தமின்றி நூலில் கண்டபடியே இங்கு கொடுத்துள்ளோம்.)

றஙகுமபாாக கிறம பாணடியனெனகிறவன ஒரு தனருசசியம ஆணடு கொணடிருககிறவனே கலியுகததில சாலீவாகன சகாறதம—0உ௱சயிசு—கது மெலகொலலமழிநது ஆணடு உ௱உயிள—கது மெல ருதி ரெுததுககாரி—௵ ஆணிமீ—வடக கெடிலலியிலிருந்து ஆதி சுலுததானமலுககு நெமியானயென பானும வநதுபருககிறம பாண டிய தெவரைப பிடிதது டிலலிககு அனுப்பிச சுப பொடடுராசசி யததைக கடடிககொணடார்களருதிரெுககாரி—௵ ஆணிமீ முதல குரெுதன—௵—வரைககும—௵ ந—கதுயெம செதுபரியநதமதுலுக காணமாயமனமநதாமாய ஒரு வருககொருவர் தொனருமல கிலாப மாயிருநது பினபு உலாதிகாணயெனகிற துலுககன வநது அட செய—௵—முதல பிறசொறபததி வருசம வரைககும—௵சு—கது ராசசியம ஆணடான உலபுபதிகான உதமசசிககு எனகிறவன ஆஙகீல—௵—முதலபவ—௵—வரைககும ௵ந—கது ராசசியம ஆண டான பினபு மெலபபடி மருமகன சூதியெனகிறவனயிவ—௵ முதல பிறமாதி—௵—வரைககு மாாசசியம ஆணடான பினபு விககிறம—௵ முதல விளமபி வருசம வரைககு மாாசசியம ஆணடான பினபு விகாரி—௵ முதல சாதாருண—௵ வரைககு மபவுநதிககு மலுககு எனகிற வனாாசசியம ஆணடான சகாறதம—0உ௱சயிசு—முதல—௵ சயிஅ—ராசசியம் ஆணடான ஆணடான துலுககாணமானதால ஞயனர் மதுரைககு வாயதத பெருமாளும நாஞகிடைடிலப பொயி ருநதார் அபபொது பஞசாட சாதிருமதிளும பதிஞலு கொபுாமும தெருவீதியளும இடிபடடுது நாயனர் கெறபககிறகம அறத மணட பம மகாமணடபமயிது களதபபி யிருநது துயிபபடி துலுக காணமா யிருககிறனளெயில சகாறதம—0உ௱கூயிசு—கது மெல செலலா நினற விரெுதிகிருது—௵—மயிசூருனாாசா வாசலில தளகறதமகமபண உடையவர் கனனடியர் துலுககனே வெடடித தூததிருசசியம கட டிககொணடு சிவஸதலம விஷணுஸதலமெலலாம திருககாபபு நீககி திருவாலவாயுடைய நயினர் கொவிலச சனனதியில திருககாபபு நீககி சுவாமி தெரிசினம பணணப பொகையில சுவாமிககு அன றைககு வைசச விளககும அனறைககு சாததின சநதனமும மாலே யும விளா பூசையிலச சாததின கால சநதியில கழிககிற பொது யெபபடி இருககுமொ அபபடி இருநதுது அந்த அதிசெயததை கமபண உடையவர் கணடு வெகு சநதொஷபபட்டு கணகளிலெ அறைநதுகொணடு வெகு பததியுடனெ உபசாரஙகள செயது அனெகங கிருமஙகளும விடடுககுடுதது அனெக திருவாபாணமுங குடுதது திருவாருதனேக கடடளேயும நடபபி விசசுககொண்டு கமபன உடையவர் அவர் மகனயெமபனுடையவர் அவர் மருமகன பொற்காசு உடையார் இவர்கள மூனறு பெரும விரெுதிகிறுது—௵—முதல சிததிரபானு வருஷம வரைககும—௵ நயிந—கது ருசசியம் ஆண டார்கள'

(தொடரும்)

---

திருத்தம்:— சென்ற இதழ் பக்கம் 263 வரி 33ல் சூழ்ந்துள பாரனே யாள் என்பதனேச் சூழ்-அந்துபார் அனேயாள் எனத் திருத்திக் கொள்க. அந்துபார்—ஓர் ஊர்.